Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சிறியதோ, பெரியதோ, எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

FedEx Express

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மாசி – 24 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 26 (08.03.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:159

## கிழக்கு நிலைமை குறித்து உயர் பாதுகாப்பு மாநாடு!

(கொழும்பு)

கிழக்கில் இடம்பெற்றுவரும் தொடர்ச்சியான படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக – பாதுகாப்பு அமைச்சில் நேற்று உயர்மட்ட மாநாடொன்று நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

முப்படைகளினதும் தளபதிகள், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் தற்போதையை நிலை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

கிழக்கு மாகாண மக்களை எந்தவிதமான தாக்குதல் அச்சுறுத்தலில் இருந்தும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கண்காணிப்பு மற்றும் தேடுதல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ உளவாளி ஒருவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு – ஆரையம்பதியில் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினருக்கு தகவல் வழங்குபவர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சதாச்சரலிங்கம் கமலதாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ள இவர், ஏற்கனவே ஆரையம்பதி பிரதேசத்தில் இயங்கிய வரதன் குழுவில் இணைந்து செயற்பட்டவர் எனக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினமிரவு வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் இவரை எதிர்கொண்ட இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

கழுத்திலும், தலையிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகி அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

கடந்த ஜுலை மாதம் 26 ஆம் திகதியும் இவர் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டு காயமடைந்திருந்தார்.

# பொதுக் கட்டமைப்பை உருவாக்குமாறு ஐரோப்பிய யூனியன் அரசுக்கு அழுத்தம்!

## வெளிவிவகார ஆணையாளர் சந்திரிகாவிடம் நேரடியாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல பிரதேசங்களுக்கும் உதவிகளை சமமாகப் பகிர்வதற்கு விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெரேரோ வோல்ட்னர் ஜனாதிபதி சந்திரிகாவிடம் வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

நேற்று கொழும்பு வந்த வோல்ட்னர் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பை (12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



## தமிழகத்திலிருந்து திரும்பிய யுவதியை படகோட்டிகள் குழு பாலியல் வல்லுறவு!

### மன்னார் மணல்திட்டில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திரும்ப முயன்ற சுமார் 50 தமிழ் அகதிகள் தலைமன்னார் கடலிலுள்ள மணற்திட்டில் கைவிடப் [illegible] வாகியுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக் கிழமை இரவு இந்தியப் படகொன்றில் தாயகம் திரும்பிய 50 இலங்கை [illegible]

## சோதனைச்சாவடிகள் கூடுதல் நேரம் திறப்பு!

(கொழும்பு)

மகாசிவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு ஓமந்தை, உயிலங்குளம் மடுவீதி, முகமாலை ஆகிய இடங்களில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடிகள் கூடுதலான நேரத்துக்கு இன்றும் நாளையும் திறக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

## விண்ணாணம் விநாசியர்



ஆர் என்ன சொன்னாலும் அம்மா – தான் அசையுறவில்லையே!

# தமிழகத்திலிருந்து திரும்பிய யுவதியை படகோட்டிகள் குழு பாலியல் வல்லுறவு!

## மன்னார் மணல்திட்டில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திரும்ப முயன்ற சுமார் 50 தமிழ் அகதிகள் தலைமன்னார் கடலிலுள்ள மணற்திட்டில் கைவிடப்பட்ட நிலையில் இருந்தபோது – அங்குவந்த படகோட்டிகள் குழுவொன்று இளம்பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவர்களிடமிருந்து நகைகள், ரொக்கப் பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துக்கொண்டு அந்தக் குழு தலைமறைவாகியுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக் கிழமை இரவு இந்தியப் படகொன்றில் தாயகம் திரும்பிய 50 இலங்கை அகதிகள் மணற்திட்டு ஒன்றில் கைவிடப்பட்டு இருந்ததாகவும் இவர்கள் தொடர்பாகக் கிடைத்த தகவலையடுத்து தலைமன்னார் கடற்படையினர் அவர்களை மீட்டு வந்து தம்மிடம் ஒப்படைத்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சோதனைச்சாவடிகள் கூடுதல் நேரம் திறப்பு!

(கொழும்பு)

மகாசிவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு ஓமந்தை, உயிலங்குளம் மடுவீதி, முகமாலை ஆகிய இடங்களில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடிகள் கூடுதலான நேரத்துக்கு இன்றும் நாளையும் திறக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

ஓமந்தை, உயிலங்குளம் ஆகிய சோதனைச் சாவடிகள் இன்றும், நாளையும் 24 மணி நேரமும் திறந்திருக்கும். மடுவீதி சோதனைச் சாவடிகள் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும். முகமாலை சோதனைச் சாவடி காலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். குடாநாட்டில் நேற்று பூரண துக்கம் அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தின் உழவு இயந்திரம் மோதி மாண்வி உயிரிழந்ததை அடுத்துஆவேசம் கொண்ட மக்கள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் வயோதிபர் ஒருவர் பலியானதுடன், நான்கு பேர் படுகாயமடைந்த சம்பவத்தைக் கண்டித்து நேற்று யாழ். குடாநாடு எங்கும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள், வீதிகள் எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு சோககீதம் ஒலிக்கவிடப்பட்டு துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதேவேளை நேற்றுக் காலை 11 மணியளவில் பாடசாலைகளில் கல்விகற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் எழுந்து நின்று உயிரிழந்த மாணவிக்கு ஒரு நிமிடம் தமது அஞ்சலியைத் தெரிவித்தனர்.

யாழ். குடாநாட்டில் இயல்பு நிலை பாதிக்கப்படாத நிலையில் முழுமையாக துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இராணுவத்தினரும் பொலிஸாரும் யாழ். நகரப் பகுதிகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

# யாழ்.மாணவர் சமூகத்தினர் நேற்று கண்டனப் பேரணி!



(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் உழவு இயந்திரம் மோதி பாடசாலை மாணவி மரணமடைந்த சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இராணுவத்தினர் மக்கள் மீது அடாவடித்தனங்களை மேற்கொண்டு வயோதிபர் ஒருவரை சுட்டுக் கொன்ற சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் – (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் உயர்மட்டக் குழு நாளை ஐரோப்பா பயணம்!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின்அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்சசெல்வன் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் நாளை ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் –

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதித்துறைப் பொறுப்பாளர் பரா உள்ளிட்ட முக்கியஸ்தர்களே இந்த உயர்மட்டக் குழுவில் இடம்பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாளை காலை கிளிநொச்சியிலிந்து ஹெலிகொப்டர் மூலமாக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் செல்லும் இந்த உயர்மட்டக் குழுவினர் – அங்கிருந்து ஐரோப்பிய பயணத்தை ஆரம்பிக்கவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுனாமி அனர்த்தத்துக்குப் பின் ஏற்பட்டிருக்கும் அரசியற் சூழல் மற்றும் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளின் உயர்மட்டக்குழுவினர் ஐரோப்பிய நாடுகளின் ராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வவுனியா கல்வியியற் கல்லூரிக்கு தெரிவானோர் பெயர் விபரம்

## உடற்கல்வி

எஸ்.பி.திவாகரன் (200, நீதிமன்றவீதி), எஸ்.பீற்றர்சன் (எழுதூர்), எஸ்.கிருஷாந்தி (ஜோசப் பெண்கள் விடுதி), என்.சுரேஸ்குமார் (கிரான்குளம்), இ.புவனேந்திரகுமார் (தேற்றாத்தீவு), கே.விேனாஜிதா (தண்ணீருற்று), என்.ஜெயதீபன் (என்.சி.வீதி, திருகோணமலை), கியூ.சி.சஞ்சீவன் (நியூ வன்னியாஸ் வீதி), எஸ்.மிருனாளினி (மத்தியாஸ் வீதி), எஸ்.கஜந்தினி (மத்தியாஸ் வீதி), எஸ்.கவிதா (ஞானசூரியம் விடுதி, இரண்டாம் குறுக்குத்தெரு), ஏ.ஜே.சூசை (வங்காலை), ஜே.அகஸ்ரின் (வட்டக்கண்டல்), பி.எஸ்னா (அம்பிலாந்துரை வடக்கு), ஆர்.இராஜகாந்தன் (பன்னாலை),

## ஆரம்பக்கல்வி

சுப்பிரமணியம் கமலாகரன் (ஏழாலை), இலட்சுமணலிங்கம் மேரிலின்சியா (கொழும்புத்துறை), தவராசா மகழ்ராஜன் (கரவெட்டி), பாலசிங்கம் சிறிதேவி (கரவெட்டி), ஜோசப் அன்ரன் சம்சன் (யாழ்ப்பாணம்), கல்ப்பனா சபாநாயகம் (உடுப்பிட்டி), நிலாஜினி மகாலிங்கம் (சாவகச்சேரி), சிவாஜினி பரமன் (ஊர்காவற்றுறை), சிறிரதம் தீஸன் (புத்தூர்), நடராஜா ஆனந்தராஜா (தெல்லிப்பளை), கார்த்திகா இராஜதுரை (கோப்பாய்), கார்த்திகேசர் அபிராமி (கரவெட்டி), ஜெயராதிகா கணபதிப்பிள்ளை (பளை), யு.எஸ்.என்.என்.யஸ்மின் (கெக்கிறாவை), பிறேமளா சூசை (தலைமன்னார்), வின்சன் ஜோர்ச் மசீனோ றோசி (பாலமுனை), ஜேசுதாசன் பவளமலர் (வெளிக்குளம்), நயினா மொகமட் மொகமட் இர்ஃபான் (கொறவப்பொத்தானை), சண்முகலிங்கம் நிஷாந்தினி (வவுனியா), கருணாமூர்த்தி சிவகுமாரன் (மல்லாவி), நமசிவாயம் சுமன் (புதுக்குடியிருப்பு), பிரான்சிஸ் ஜெயகாந்தன் (குருநகர்), பாலகிருஷ்ணன் செல்வகுமார் (விசுவமடு), மொகமட் அலி சிம்யா (திருகோணமலை), மௌவ்தியா மௌறூஃப் (வவுனியா), அருந்தவராசா சமிலா (தாளையடி), சுப்பிரமணியம் சித்ரா (முத்தையன்கட்டு), சுப்பிரமணியம் உமையவன் (சின்னப்புதுக்குளம்), சின்னத்தம்பி மயூரன் (கண்டாவளை), கனி பஸ்மியா உம்மா (வவுனியா), சுலக்ஷனா கமலச்சந்திரன் (தரணிக்குளம்), சசிதனா கிளானிங்வெல் (வவுனியா), மரியசோபனா செல்வரதம் (கட்டைக்காடு), வாசுகி தங்கராஜா (காரைநகர்), இதயா தவேந்திரன் (நீர்வேலி), கோபலபிள்ளை சுதர்சினி (நெடுந்தீவு), சுகந்தா வடிவானந்தா (திருநெல்வேலி), நவரத்தினம் யாழினி (பண்டாரிக்குளம்), பவப்பிரியா அந்தோனிப்பிள்ளை (பளை), மரியரத்தினம் சாமினி (பருத்தித்துறை), ஜெகதீஸ்வரி ஐயாத்துரை பரந்தன் அருளானந்தம் சிவறோகினி (நெடுக்குளம்), வேலுப்பிள்ளை கபிலகாந்தன் (ஒட்டுசுட்டான்), தயாழினி செல்வராஜா (யாழ்ப்பாணம்), மகேந்திரன் சிவரூபி (வவுனியா), சுமங்கலை செல்வராஜா தெல்லிப்பளை), பொன்னையா கண்ணதாசன் (கல்முனை), கிருஷ்ணபிள்ளை ரூபன் (திருக்கோயில்), செல்வராஜா சுதர்சனா (குடியிருப்பு), சங்கீதா வேலாயுதம் (ஈச்சிலம்பற்று), நகுலேஸ்வரி கறுப்பையா (அடம்பன்), சண்முகராஜா ரஜித்குமார் (பெரிய நீலாவணை),

## விஞ்ஞானம் (தமிழ்)

எம்.ஜே.பாத்திமா (கேகாலை), சங்கீதா விவேகானந்தராஜா (கோண்டாவில்), உமா பாலச்சந்திரன் (வசாவிளான்), சுஜிகா துரைராஜா (கோண்டாவில்), செபஸ்தியாம் இராஜமனோகரன் பொல்டன் ரஜீவ் (வவுனியா), ராஜேந்திரம் சசிக்குமார் (கோண்டாவில்), சிதம்பரநாதன் நீரஜா (ஏழாலை), கார்த்திகாயினி சிவகுருநாதன் (கந்தர்மடம்), சண்முகராஜா க்ஜவதனி (ஏழாலை), குமாரவேலு யோகரத்னராஜன் (மானிப்பாய்), மேரி ரஞ்சினி அருளானந்தம் (கைதடி), அருளப்பு ஜீனாட் நிரோசன் (நவாலி), கார்த்திகா பாலச்சந்திரன் (திருநெல்வேலி), செல்வராஜா செல்வகி (சுன்னாகம்), திருக்குலசிங்கம் திருவருட்செல்வன் (வல்வெட்டித்துறை), நிவேதினி கண்ணபிரான் (தெல்லிப்பளை), நீலகண்டக் குருக்கள் சிவரூபி (வரணி), பசுமதி கணபதிப்பிள்ளை (நீர்வேலி), சிந்துஜா நவரட்ணவேலு (கல்வியங்காடு), சுந்தரலிங்கம் கோகிலா (அல்வாய்), மயில்வாகனம் ரகுதீபன் (பளை), தேவதாஸ் ஜெயந்தன் (திருகோணமலை), தட்சாயிணி பரமானந்தம் (கோப்பாய்), தயாபரன் பரமேஸ்வரன் (வட்டுக்கோட்டை), சங்கீதா நடராஜா (நீராவியடி), திருச்செல்வம் சசிகலா (சுழிபுரம்), உமாகாந்தன் திருக்குமரன் (சுண்டுக்குளி), கனகமனோகரி வைரவநாதன் (நீர்வேலி), தர்சினி புலேந்திரன் (பண்டாரிக்குளம்), மேனகாதேவி உதயகுமார் (வவுனியா),

## இந்துசமயம்

சௌந்தரராஜன் விமலராஜ் (காரைதீவு), கசிந்தினி சந்திரசேகரம் (கனகராஜன் குளம்), இராஜேந்திரம் பிரதீபா (கரவெட்டி), சிவகலா அழகரத்தினம் (திருக்கோயில்), சுந்தரலிங்கம் சுகந்தினி (ஆரையம்பதி), நந்தினி துரைராசா (மல்லாவி), திருச்செல்வன் ரஜிகலா (பெரியகல்லாறு), மத்மலாவண்யம் கந்தசாமி (சுழிபுரம்), பத்மரூபி வரதராஜா (சுழிபுரம்), தேவகுரு ஶ்ரீ கமலன் (முள்ளியவளை), சின்னத்துரை சிவகுமார் (கரவெட்டி), ஜெயந்தினி சின்னத்தம்பி (இயக்கச்சி), ரட்னசிங்கம் பிரதீபன் (கோப்பாய்), கோவிந்தன் சிறிதரன் (மூதூர்), சோமு றொகான் ராஜ் (சண்டிலிப்பாய்), ஆறுமுகம் நிசாந் (எழுதுமட்டுவாழ்), தம்பிஐயா தர்மசீலன் (வரணி), வசந்தநாதன் ஜெகநாதன் (வசாவிளான்),

# சிவராத்திரி விழா

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் ஶ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா இன்று மிகவும் சிறப்பாக இடம்பெறவுள்ளது. இதில் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

# திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில் இன்று மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற மகளிர் அவை, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுடன் இணைந்து இன்று காலை 9.00 மணி முதல் மாலை வரை மகளிர் தின நிகழ்வை நடத் தவுள்ளது.

இந்நிகழ்வுகள் மணற்காடு, குடத்தனை ஆகிய பிரதேசங்களில் இடம் பெறும் இதில் சுற்றாடலை அலங்கரித்தல், கிராம மக்களைக் கொண்டு வாசகம் எழுதுதல், காட்சிப்படுத்தல், பெண்கள் எழுச்சிப் பாடல்கள், கவிதைகள், நடனங்கள், நாடகங்கள் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு புதிய நம்பிக்கையை, எதிர்கால இலக்கை நோக்கி பயணிக்க வழிவகுக்கவே இந்நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளதாக திருமறைக்கலாமன்ற ஊடத்துறை இணைப்பாளர் செல்மர் எமில் தெரிவித்தார்.

# பல்கலைக்கழக ஊழியர்கள் நாளை அடையாள வேலைநிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக துணைவேந்தர் பெப்ரவரி மாதம் பேரவைக்குச் சமர்ப்பித்த அறிக்கை மற்றும் அது தொடர்பான தீர்மானம் பற்றிய தமது கோரிக்கைகளை இதுவரை ஏற்றுக்கொள்ள மறுத்தமையால் நாளை அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதென முடிவு செய்துள்ளதாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு, நீர்விநியோகம் மற்றும் பரீட்சைப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு மட்டும் இதலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

நாளை காலை 9.00 மணிக்கு ஊழியர்கள் அனைவரையும் இராமநாதன் மண்டப முன்றலில் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# கல்விப் பணிப்பாளர் பொறுப்பேற்பு

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராக வே.தி.செல்வரட்ணம் நேற்று உத்தியோக பூர்வமாக கடமையேற்றார்.

அண்மையில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பலர் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இதுவரை காலமும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய ப.விக்னேஸ்வரன் வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய வே.தி.செல்வரட்ணம் யாழ் வலயக் கல்விப்பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காத்தவராயன் நாடகம்

மகாசிவராத்திரியை முன்னிட்டு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இன்று இரவு 10 மணியளவில் காத்தவராயன் இசை நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. (14)

# கடைகளுக்கு விடுமுறை

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வர்த்தக ஊழியரின் நலன் கருதி நாளை கடைகளை மூடி சகல வர்த்தக ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்குமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

நாகம்ஸ் சுன்னாகம்
8 முதல் சரத்குமார், நமீதா, வடிவேல், கபாலி நடித்த
ஏய்
தினசரி/கா: 11.00, 3.00, 7.00
சிவராத்திரியை முன்னிட்டு விசேட காட்சிகள்
நள்ளிரவு: 10.00, 1.00 (பு.நே)
(சி-3860)

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், நதீஷா, ரவிகிருஷ்ணா நடித்த சுக்ரன்
11.03.2005 முதல் சூர்யா நடித்த மாயாவி
சிவராத்திரி தினத்தை முன்னிட்டு விசேட காட்சியாக
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, 12.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜெயம் ரவி அசின் நதியா, பிரகாஷ்ராஜ் நடித்த
M.குமரன் SON OF மகாலட்சுமி
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
இரவு விசேட காட்சியாக விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி
கா.நேரம்: 9.30, 12.30 (பு.நே)
(சி-3856) (சி-3858)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
சிவராத்திரி தினத்தை முன்னிட்டு 07.03.2005 முதல்
விஜய், சங்கவி, சுபலக்சுமி நடித்த கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 12.00 3.00
நிலவே வா
பலருடைய பாராட்டுதலையும் பெற்ற இத்திரைப்படம் முதல்முதலாக இலங்கையில் திரையிடப்படுகின்றது.
(சி-3857)

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு (இரு வேடம்), ஜோதிகா கவுண்டமணி நடித்த
மன்மதன்
சிவராத்திரியை முன்னிட்டு (சி-3859)
இன்று: 10.30, 2.30, 6.30, 9.30 நள்ளிரவு 1.30 காட்சிகள் காண்பிக்கப்படும்.

# பாலைதீவு உற்சவத்துக்கு ஐயாயிரம் பக்தர்கள் திரண்டனர்

வரலாற்றுப் புகழ்பெற்ற யாத்திரைத் தலமான பாலைதீவு அந்தோனியர் ஆலய திருநாளுக்கு இந்த முறை 95 ஆயிரம் பக்தர்கள் சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் நவாலி, சாவற்காடு, நாவாந்துறை, அல்லைப்பிட்டி, தீவகம், குருநகர், பாசையூர், ஆகிய இடங்களிலிருந்தும் – வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள பாலாவி, பள்ளிக் குடா, நாச்சிக்குடா, வலைப்பாடு ஆகியவற்றில் இருந்தும் மன்னார் மாவட்டத்தில் பள்ளிமுனை, பேசாலை மன்னார் ஆகிய இடங்களில் இருந் தும் பெருந்தொகையான பக்தர் கள் பாலைதீவுக்கு வருகை தந்தி ருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாத்திரிகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, யாழ்ப்பாணத்திலிருந்து கச்சான், கடலை, அழகுசாதன மற்றும் குளிர்பானக் கடைகளும் வன்னியில் இருந்து தேனீர்க் கடைகளும் இந்தத் தீவுக்குக் கொண்டுவரப் பட்டிருந்தன.

ஞாயிறு திருநாள் திருப்பலியை அடுத்து நேற்றும் யாத்திரிகர்கள் ஆலயத்தைச் சூழ்ந்திருந்ததால் பங்குத்தந்தையால் மேலதிக திருப்பலி ஒன்று நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.

அதேவேளை நேற்றுடன் யாழ்ப்பாணப்பிரதேசத்தில் இருந்து சென்றவர்கள் திரும்பிவிடவேண்டுமென்ற படையினரின் கட்டளைகளுக்கமைவாக நேற்றே பாலைதீவில் இருந்து அனைவரும் தத்தமது இடங்களுக்கு திரும்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாலைதீவில் தேனீர் 10 ரூபாவாகவும், ரொட்டி 6 ரூபாவாகவும், கொத்துரொட்டி 70 ரூபாவாவும், ஒன்றரை லீற்றர் சோடாப் போத்தல் 150 ரூபாவாகவும், சாதாரண அளவிலான சோடா 50 ரூபாவாகவும் விற்கப்பட்டதென்றும் தெரியவருகிறது. (206,113)

# மகளிர் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் மகளிர்தினவிழாவை கொண்டாடும் வகையில் மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையிலுள்ள நிலையப் பணிமனையில் – மகளிர் ஒன்றுகூடல் இன்று பி.ப. 2 மணியளவில் நடைபெறவுள்ளது. இதில் ஆர்வமுள்ள பெண்கள் பங்கு கொண்டு விழாவை சிறப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# பாலைதீவு அந்தோனியார் திருவிழாக் காட்சிகள்









(13)

## தனியார் கல்வி நிறுவனங்களுக்கு

# பட்டங்கள் வழங்கும் அனுமதியை ஜனாதிபதி சந்திரிகா மீள்பரிசீலனை




கொழும்பு - அக்குவைனாஸ், தேசிய அபிவிருத்தி ஆசிய கல்வி நிறுவனங்களுக்கு பட்டங்கள் வழங்குவதற்கு கொடுக்கப்பட்ட அனுமதியை ஜனாதிபதி மீள் பரிசீலிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி இரவு ஜனாதிபதிக்கும் - ஜே.வி.பி முக்கியஸ்தர்களுக்கும் இடையில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் போது ஜே.வி.பியினர் தனியார் மருத்துவக் கல்லூரிகளை அரசு ஏற்படுத்துவதற்கு எதிராக கடும் கண்டனங்களை வெளியிட்டனர்.

இதேபோன்று தனியார் நிறுவனங்கள் மூலம். பட்டங்களை வழங்குவதற்கும் தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர்.

கடந்தகால அரசின் முதலீட்டுத் திட்டத்துக்கு அமைய தனியார் பட்டங்களை வழங்குவதற்கு ஆயத்தமாக இருந்தபோதிலும், இதுவரை செயற்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் மங்கள சமரவீரவும், தினேஷ் குணவர்த்தனவும், முக்கிய அமைச்சர்களும் பங்கேற்றனர்.

ஜே.வி.பியினர் சார்பில் அமைச்சர் விஜித ஹேரத், பிரதி அமைச்சர்களான விமல் ரத்னாயக்க ஆகியோர் பங்குபற்றினர். (தே)

# முஸ்லிம்களின் காணிப்பிரச்சினைக்கு விரைவில் சுமுகமான தீர்வு கிட்டும்!

## விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

எதிர்வரும் பெரும்போக வேளாண்மைச் செய்கைக்கு முன்னதாக முஸ்லிம்களின் நெற்காணிகள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு அவை உரியவர்களிடம் கையளிக்கப்படும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தயாமோகன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மகிழடித்தீவு மகா வித்தியாலயத்தில் முஸ்லிம் மக்களின் காணி தொடர்பாக ஆராயும் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

காணி தொடர்பான பிரச்சினைகளை சம்பந்தப்பட்டவர்களிடம் நேரடியாகப் பேசி பொருத்தமான தீர்வொன்றைக் காண்பது - அது சாத்தியப்படாது விடின் தமிழீழ நீதிமன்றம் ஊடாக நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதே தமது நோக்கமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் தமிழீழ பொருண்மிய மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் ஈழமாறன், மட்டு - அம்பாறை மாவட்ட நீதியாளர் ஈழமாறன் உட்பட சேம நலசேவைத் திணைக்கள அதிகாரிகளும் தமிழ், முஸ்லிம் விவசாயப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்

# அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்குமாறு நிர்ப்பந்தம்!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் பிரதம வேட்பாளர் யார் யார் என்பதை அறிவிக்குமாறு சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்கள் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சி - ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை அறிவித்ததோடு, உத்தியோகப் பற்றற்ற முறையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளையும் ஆரம்பித்ததைக் கருத்திற்கொண்டே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் குழு உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் இவ்வாரம் அறிவிக்கப்படும். அத்துடன் இந்தப் பிரசாரக் குழு மே மாதம் தொடக்கம் நாடு முழுவதும் செயற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னோடியாக வெற்றிடங்களாக உள்ள தொகுதி அமைப்பாளர்களின் வெற்றிடங்களை நிரப்புவதோடு, இந்தப் பதவிக்கு இளைஞர், யுவதிகள் திரைப்படக் கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், மருத்துவர்கள், சட்டத்தரணிகள், தொழிற்சங்க வாதிகள் உட்பட பல புதிய முகங்களை அறிமுகப்படுத்தவிருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. (தே)

# டிலான் பெரேராவுக்கு சமாதான அமைச்சர்பதவி?

(கொழும்பு)

இந்த மாதம் முடிவடைவதற்குள் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சரவையில் இல்லாத இருவரும் பிரதி அமைச்சர்களான டிலான் பெரேரா, மகிந்தானந்த அளுத்கமகே ஆகிய இருவரும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவியேற்கவுள்ளனர்.

புத்த சாசன அமைச்சராக உடுவே தம்மாலோக தேரரும், ஊடக அமைச்சராக மகிந்தானந்த அளுத்கமகேயும் பதவியேற்கவுள்ளனர். சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் புதிய அமைச்சொன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இந்த அமைச்சுக்கான அமைச்சராக தற்போது பிரதி அமைச்சராக உள்ள டிலான் பெரேராவுக்கு வழங்கப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# வெலிக்கந்த கொலையுடன் தொடர்புடையவர்கள் சிங்களத்தில் பேசியதாக மக்கள் கூறினர்!

## பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

வெலிக்கந்த பிரதேசத்திலுள்ள கொலக்குனாவ வெளியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் யார் என்பது குறித்து, இதுவரை கண்டறியப்படவில்லை என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். சவஹன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தக் கொலைச் சம்பவத்துக்கு மகாவலி காணி சுவீகரிப்பின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகளும் காரணமாக இருக்கலாம் என்று தகவல்கள் தற்போது கிடைத்துள்ளது.

இதன் காரணமாகப் பல்வேறு கோணங்களில் இது பற்றிய விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும், இதற்கென இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் சிங்கள மொழியில் பேசியதாக அந்தப் பிரதேச மக்கள் கூறியுள்ளனர்.

துப்பாக்கிதாரிகள் முதலில் சிங்கள விவசாயிகளின் வீட்டுக்குச் சென்று அவர் மீதும், அவரது பிள்ளைகள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் விவசாயி கொல்லப்பட்டார். அவரது மூன்று வயது மற்றும் 16 வயது பெண் பிள்ளை காயமடைந்துள்ளனர்.

அதன் பின்பு தமிழ் விவசாயியின் வீட்டுக்குச் சென்று, அவரை வெளியே அழைத்து துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டு முஸ்லிம் விவசாயியின் வீட்டிலிருந்தவர்கள் வெளியே வந்து பார்த்த போது - அந்த வழியாக வந்த ஆயுததாரிகள் அந்த வீட்டிலிருந்த அனைவரையும் துப்பாக்கி முனையில் வீட்டுக்கு உள்ளே தள்ளிச்சென்று, துப்பாகியால் சுட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதில் நான்கு முஸ்லிம் விவசாயிகள் கொல்லப்பட்டுள்ளனர். விவசாயி ஒருவரின் மனைவி காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதிக்குச் சென்று, நேரடியாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

பொலிஸாரின் விசாரணை அறிக்கை கிடைத்த பின்பே இதுபற்றிய கருத்துக்களைத் தங்களால் வெளியிடமுடியும் என, கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

### ஒரு கட்டடத்தை அமைக்க இரண்டு தடவை கொடுப்பனவு

வடக்கு - கிழக்கு மாகாண பிரதமசெயலாளரின் அலுவலகத்தை நிர்மாணித்த கட்டட ஒப்பந்தகாரருக்கு 65 லட்சம் ரூபா இரண்டு தடவைகள் வழங்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக் காசோலை இரண்டாவது தடவையாக வழங்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவை இரண்டாவது தடவையாக காசோலையாக பெற்றுக்கொண்டவர் தாம் இதனைப் பெறவில்லை என முதலில் மறுத்துவிட்டார். பின்னர் இந்தத் தொகை வங்கியில் இவரின் கணக்கினூடாக மாற்றப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிப் பொலிஸாருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# ஜே.வி.பி. விலகினால் நிபந்தனையுடன் அரசுக்கு ஆதரவளிக்க கூட்டமைப்பு தயார்

## சிவாஜிலிங்கம் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் குறித்த இதயசுத்தியான நடவடிக்கைகள் மற்றும் சுனாமி அனர்த்த நிவாரண நிதிப்பங்கீட்டில் புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஆகிய விடயங்களில் அரசு ஆரோக்கியமான முடிவை எடுக்குமானால் -ஜே.வி.பி விலகினாலும் அரசுக்கு ஆதரவளிக்க தமிழ்த்தேசியக் கூட் டமைப்பு தயார் எனறு, தமிழ்க் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கொழும்பு தனியார் தொலைக்காட்சி சேவையொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்—

சமாதான முயற்சிகளின் முன்னெடுப்புக்கும், புலிகளுடன் இணைந்து அரசு மேற்கொள்ளும் நன்நோக்குமிக்க நடவடிக்கைகளுக்கும் ஜே.வி.பி மிகப்பெரிய தடையாகும்.

ஆகவே, புலிகளுடன் இணைந்து நிவாரண நிதிப் பங்கீட்டுக்கு பொதுக் கட்டமைப்பு ஒன்றை அமைத்து, தமிழ் மக்களினதும் - புலிகளினதும் நம்பிக்கையை அரசு வெல்லவேண்டும்.

அத்துடன், சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆரோக்கியமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

இந்த வரையறைகளுக்கு அரசு ஒப்புக்கொள்ளுமானால், சாதகமான பதிலைத் தருமானால், பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடிய நல்லெண்ண சமிக்ஞையைக் காண்பிக்குமானால், ஜே.வி.பி விலகினாலும் அரசுக்கு நாங்கள் ஆதரவளிப்போம்.

எமது மக்களுக்கு உதவும், அவர்களின் அபிலாஷைகளைப் புரிந்து செயற்படும் அரசுக்கு ஆதரவளிப்பது எமது கடமை என்றும் கூறியுள்ளார்.

# உலக வங்கியின் அறிக்கைக்கு ஜே.வி.பியினர் கடும் எதிர்ப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள் கட்டுமானப் பணிகளுக்கு உலக வங்கி 600 கோடி ரூபா வழங்கப்போவதாக விடுத்த அறிக்கையை ஜே.வி.பி கடுமையாகச் சாடியுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை அங்கீகரிப்பது போல, ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையை கொழும்புக்கான உலக வங்கியின் வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹெரோல்ட் வாபஸ் பெறாவிட்டால், அவரை பதவியிலிருந்து நீக்குமாறும் ஜே.வி.பி கோரியுள்ளது.

கொழும்புக்கான உலக வங்கியின் பிரதிநிதி, நாட்டின் இறைமைக்கும் ஒருமைபாட்டுக்கும் அச்சுறுத்தல் விளைவிக்கக்கூடிய வகையில் அறிக்கை விடுகிறார். தனக்கு வரையறுக்கப்பட்ட கடமைகளில் எல்லை மீறிச் செயற்படுகிறார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்ற ஒரு பகுதி இந்த நாட்டில் உள்ளது என்ற தோற்றப்பாட்டைக் காண்பிக்க முயல்கிறார். ஒரு நாட்டின் உள்விவகாரத்தில் உலக வங்கி மட்டுமல்ல எந்த ஒரு வெளித்தரப்பும் தலையிடமுடியாது.

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை விசாரணைக்காக நீதிமன்றின் முன்னுள்ள வேளையில் - அப்படிப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் உலக வங்கி பிரதிநிதி எந்த அறிக்கையையும் விட முடியாது.

சர்வதேச பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுடன் அபிவிருத்தி குறித்தோ நிதி விவகாரங்கள் குறித்தோ உலக வங்கி உள்ளிட்ட எந்த சர்வதேச அமைப்போ அல்லது நாடோ பேச முடியாது.

இந்த நியதிகளை மீறி செயற்படும் பீற்றர் ஹெரோல்டின் செயற்பாடு நாட்டின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் அபாயகரமானதாக உள்ளது என்று ஜேவி.பி தெரிவித்துள்ளது.

# கதிர்காமர் - ஜயந்த தனபால முரண்பாடுதான் சமாதான முயற்சியின் பின்னடைவுக்கு காரணம்

## லக்ஷ்மன் கிரியல்ல தெரிவிப்பு

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும், அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுக்கும் இடையில் தொடரும் முரண்பாடுதான் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாததற்கு முக்கிய காரணம் என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல குற்றம் சாட்டியுள்ளார்.


இந்த இருவருக்கும் இடையில் பனிப்போர் நடைபெற்று வருகின்றது. அரசின் சமாதான முயற்சிகளில் யாரும் தலையிடுவதை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விரும்பவில்லை. ஆகவேதான் இந்த இழுபறி தொடர்கிறது. நாட்டுப் பிரச்சினையிலும் பார்க்க மோசமான பிரச்சினையான இந்த உள்வீட்டுப் பிரச்சினையை அரசு முதலில் தீர்க்க வேண்டும் என்று கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்—

சுனாமி அனர்த்த நிவாரண நிதி செல்லும் வழி குறித்து எமக்குப் பல சந்தேகங்கள் தோன்றியுள்ளன. தேவையான உதவியிலும் பார்க்க கூடுதலான உதவி கிடைத்துள்ளது என்று முதலில் கூறிய அரசு, தற்போது எதிர்பார்த்த அளவு உதவிகள் கிடைக்கவில்லை என்று கூறுகிறது. இந்த மாறுபட்ட அறிக்கைகள் நிவாரண உதவிகளின் பாதை குறித்து பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையேயான மோதல் இன்று மொஹாலியில் ஆரம்பம்!





இன்சமாம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கும், இந்திய அணிக்குமிடையேயான 3 டெஸ்ட்களைக் கொண்ட போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் மொஹாலியில் இன்று தொடங்கவுள்ளது.

இந்தப் போட்டிக்காக இரு அணி வீரர்களும் மொஹாலி மைதானத்தில் இரு நாட்களாக தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

ஒரு ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் இந்திய-பாகிஸ்தான் தொடர் நடைபெறவிருப்பதால், இந்தத் தொடருக்கு ரசிகர்களிடையே அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணில் தோற்கடித்து இந்தியா வரலாற்றுச் சாதனை படைத்தது. அதற்குப் பழிவாங்கும் வகையில் இந்திய மண்ணில் தொடரைக் கைப்பற்ற பாகிஸ்தான் போராடும்.

தற்போதுள்ள சூழ்நிலையில், இந்தியாவுடன் ஒப்பிடுகையில் பாகிஸ்தான் அணி பலவீனமாக இருந்தபோதும், இந்தியாவுடன் விளையாடும்போது பாகிஸ்தான் வீரர்கள் சிறப்பாக ஆடுவார்களெனக் கருதப்படுகிறது.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரில் இந்தியாவின் துடுப்பாட்டம் சிறப்பாக இல்லை. அதைச் சமாளிக்கும் வகையில் இந்தத் தொடரில் ஆடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


மொஹாலியில் 3ஆவது நாள் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமாக இருக்குமென்று கருதப்படுகிறது. இதனால் இரு அணியிலும் சுழற்பந்து வீச்சுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். கும்ளே, ஹர்பஜன் சிங் ஆகிய 2 சுழற்பந்து வீச்சாளர்களும் இடம்பெறுவார்கள்.

வேகப்பந்தில் சகீர்கான், இர்பான் பதான் சேர்க்கப்படுவார்கள். ஷேவாக் - காம்பீர் தொடக்க வீரர்களாகக் களமிறங்குவார்கள்.

பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரை டனேஸ் கனேரியா, அர்ஷத் கான் ஆகிய சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெறுவார்கள். சொகைப் அக்தர் இல்லாதது அந்த அணிக்கு வேகப் பந்து வீச்சில் பலவீனமே. ஆனாலும் மொகமட் சமி, அப்துல் ரசாக் ஆகியோர் உள்ளனர்.

பாகிஸ்தான் அணி அனுபவம் குறைந்ததாகவுள்ளது. கப்டன் இன்சமாம், யூசுப் யுகானா, யுனுஸ் கான் ஆகியோர் மட்டுமே அனுபவம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்களாவர். ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் குறைந்த டெஸ்ட் போட்டிகளிலேயே ஆடி உள்ளனர்.

# சதுரங்கப் புதிர்



**இன்றைய கேள்வி:**

கறுப்பு நகர்த்தல் செய்து வெற்றியடைகின்றது. இதற்குச் செய்யவேண்டிய நகர்த்தல் என்ன?

*(விடை நாளை)*

**நேற்றைய கேள்விக்கான விடை:**

1... $Qxd_1+$ 2.. $Rxd_1$ $Rxd_1+$ 3.. $Kxd_1$ $Nxf_2+$ கறுப்பானது காயொன்றினை (Peice) வெற்றிகொள்கின்றது.

**தொகுப்பு - சி. வித்தியாதரன்.**

# 77ஆவது இடத்துக்கு முன்னேறினார் இந்திய வீராங்கனை சானியா மிர்சா!



(ஹைதராபாத்)

இந்திய ரெனிஸ் இளம் வீராங்கனையான சானியா மிர்சா தற்போது 77ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இந்திய ரெனிஸ் இளம் வீராங்கனையான சானியா இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே கணிசமான வெற்றிகளைப் பெற்றுவருகிறார். மெல்போர்ன் நகரில் நடந்த அவுஸ்ரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் 3ஆவது சுற்றுக்கு முன்னேறி சாதனை படைத்த சானியா, தொடர்ந்து ஹைதராபாத்தில் நடைபெற்ற சர்வதேச ரெனிஸ் போட்டியில் சம்பியன் கிண்ணத்தை வென்றார்.

இதனைத் தொடர்ந்து டுபாயில் நடைபெற்ற ரெனிஸ் போட்டியில் கலந்துகொண்ட சானியா காலிறுதி வரை முன்னேறினார். முன்னதாக அவர் அமெரிக்க ஓபன் சம்பியன் குஸ்நெட்சோவாவைத் தோற்கடித்து அனைவருக்கும் அதிர்ச்சி அளித்தார்.

இதன் காரணமாக சானியா தற்போது 77ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். ஆண்டுத் தொடக்கத்தில் சானியா 166ஆவது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் அணி வீரர்கள் மொஹாலியில் சாதிப்பார்கள்

## இன்சமாம் நம்பிக்கை




(மொஹாலி)

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் சாதிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்று கப்டன் இன்சமாம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிக்கு முன்பாக பயிற்சி செய்வதற்கான வாய்ப்புக் கிடைக்காமல் போனது வருத்தம் அளிக்கிறது. இதன் காரணமாக பாகிஸ்தான் வீரர்களின் ஆட்டம் எந்த வகையிலும் பாதிக்காது.

இந்திய பயணத்துக்கு முன்பாக பாகிஸ்தான் வீரர்கள் அனைவரும் அவுஸ்ரேலிய போட்டியில் ஆடினார்கள். எனவே அவர்கள் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சாதிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

# பாகிஸ்தானுக்கு அனுபவமில்லையா? வியப்புத் தெரிவிக்கிறார் மியான்டட்!



(லாகூர்)

இந்தியாவுக்கு எதிராக விளையாட உள்ள பாகிஸ்தான் அணியில் அனுபவமற்ற இளம் வீரர்களே இடம்பிடித்திருக்கிறார்கள். ஆகவே இந்தியாவுக்கு இந்தத் தொடரில் அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று செய்திகள் வெளியாகின்றன.

பாகிஸ்தான் வீரர்கள் சிலர்கூட இப்படிப் பேசுகிறார்கள். இது என்னை வியப்படையச் செய்கிறது. இவ்வாறு பாகிஸ்தான் கிரிக்கெட் ஜாம்பவான் ஜாவிட் மியான்டட் இந்தியத் தொடர் பற்றி பி.ரி.ஐ செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய சிறப்புக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் என்பது பாடம் கற்றுக் கொள்ளும் இடமல்ல. கற்றுக் கொள்ளுதல் என்பது உள்ளூர் அளவில் ஆடும் போட்டிகளுடன் முடிந்துவிடும் விடயம். எப்போது டெஸ்ட் போட்டிக்கான அணியில் இடம்கிடைக்கிறதோ, அப்போதே முழு அளவில் திறமைகாட்டத் தயார் என்றுதானே அர்த்தம்.


டெஸ்ட் விளையாட வந்துவிட்டால் முழுத் திறமையும் காட்டவேண்டுமே தவிர, அனுபவம் இல்லை, இளம் வீரர்கள் என்றெல்லாம் சாக்குப் போக்குச் சொல்லக்கூடாது. தவிர தொடர் தொடங்கும் முன்னதாகவே இப்படிப்பேசி, வீரர்கள் மனதில் ஒரு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி விடக்கூடாது.

தவிர, பாகிஸ்தான் அணியில் அனுபவமற்ற வீரர் என்று யாரைச் சொல்லமுடியும்? யாசீர் ஹமீட், தௌபீக் உமர் ஆகியோர் அணியில் நுழைந்து இரண்டு ஆண்டுகள் ஆகப்போகின்றன.

இந்த மாதிரிப் பேச்சையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு முழுத் திறமையையும் காட்டினால் மட்டுமே, இந்திய மண்ணில் முத்திரை பதிக்க முடியும். ஆடுகளத்துக்குள் களமிறங்கிவிட்டால், வெற்றி ஒன்றே மனதில் இலக்காக இருக்கவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# விளையாட்டு

# இங்கிலாந்து முன்னாள் கப்டன் டேவிட் ஷெப்பேர்ட் காலமானார்!



இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் டேவிட் ஷெப்பேர்ட் காலமானார்.

புற்றுநோயால் வெகுகாலமாக அவதிப்பட்டு வந்த அவர் சனிக்கிழமை தனது 76வது பிறந்த தினத்தில் உயிரிழந்தார்.

1950களில் இங்கிலாந்து அணியின் தலைசிறந்த வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்த இவர், 1950ஆம் ஆண்டு ஓகஸ்ட்டில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அறிமுகமானார்.

22 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1172 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். சராசரி 37.80. அவர் 1975 முதல் 1997 வரை லிவர்பூல் மாகாணத்தின் ஆயராக இருந்தார்.

# அமெரிக்காவின் டேவன்போர்ட் டுபாய் ரெனிஸ் சம்பியனானார்!

(டுபாய்)

டுபாய் சர்வதேச ஓபன் ரெனிஸ் பட்டத்தை அமெரிக்காவின் லின்ட்சே டேவன் போர்ட் கைப்பற்றினார்.

டுபாயில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் டேவன் போர்ட்டுக்கு எதிராக 19வயது செர்பிய வீராங்கனை ஜெலினா ஜேன்கோவிக் விளையாடினார்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் டேவன் போர்ட் 6-4,3-6, 6-4 என்ற செட்களில் ஜேன்கோவிக்கைத் தோற்கடித்தார்.

டேவன்போர்ட் கைப்பற்றும் 47ஆவது டபிள்யூ.டி.ஏ.பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெலினா ஜேன்கோவிக்கிடம் காலிறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா தோல்வியுற்றது நினைவிருக்கலாம்.

# மூன்று பிரிவுகளிலும் சம்பியன்

(நவிண்டில்)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் 15, 17, 19 வயதினருக்கான 3 பிரிவுகளிலும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியே சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

தொடர்ந்து 5 வருடங்களாக மூன்று பிரிவுகளிலும் வடமராட்சி வலயத்தில் இந்தக் கல்லூரி சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (116)

# மரடோனாவுக்கு சத்திரசிகிச்சை



(கொலம்பியா)

உலகக் கிண்ண முன்னாள் உதைபந்தாட்ட வீரரும், ஆஜென்ரீனாவைச் சேர்ந்தவருமான மரடோனாவுக்கு எடையைக் குறைப்பதற்காக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

கொலம்பியா நாட்டில் கார்ட்டாகெனா நகரில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவருக்கு உடல் எடை 121 கிலோவாக இருந்தது. இதைக் குறைப்பதற்கான சத்திர சிகிச்சை 2 மணிநேரம் நடைபெற்றது. அவர் வைத்தியசாலையில் 3 நாட்கள் தங்கியிருக்கவேண்டியிருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்னும் 8 முதல் 10 மாதத்தில் அவரது உடல் எடை 75 கிலோவாகக் குறைந்துவிடுமென்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# பதினாறு ஓட்டங்களால் ஜனசக்தி அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஜனசக்தி கம்பனி உத்தியோகத்தர்களுக்கும், யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கி உத்தியோகத்தர்களுக்கும் இடையில் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மாலை 2 மணியளவில் நடைபெற்ற 20 ஓவர்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் ஜனசக்தி அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி கொண்ட ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியின் அணித் தலைவர் விஜயகாந்த் தனது அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

ஆட்டம் தொடர்ந்தபோது, 14.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த ஜனசக்தி அணியினர் 98 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் ஜனசக்தி அணி சார்பாக ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் உட்பட 18 ஓட்டங்களை மாசிலன் பெற்றுக்கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொமர்ஷல் அணியினர் 14.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டனர்.

இதில் கொமர்ஷல் வங்கி அணி சார்பாக ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி உட்பட 21 ஓட்டங்களை பிரான்சிஸ் பெற்றுக்கொடுத்தார். இதில் ஜனசக்தி அணி சார்பாக கமல் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனால் ஜனசக்தி அணி, 16 ஓட்டங்களால் கொமர்ஷல் அணியை வெற்றிகொண்டது. (12)

# வீரர்களின் போர் சனியன்று ஆரம்பம்

(மல்லாகம்)

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான வீரர்களின் போர் (Battle of Heros) என அழைக்கப்படும் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை, மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் பி.ப. 1.00 மணிக்கு ஆரம்பமாகி மறுநாளும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக மக்கள் வங்கி முகாமையாளர் மா.சிறிகாந்தனும், சிறப்பு விருந்தினராக செல்லையா ஸ்கந்தனும், துறைசார் விருந்தினராக றொகான் இராஜசிங்கம், பாலசிங்கம், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (72)

# 35 பொது நூல் நிலையங்கள் தரம் IIIஆக உயர்த்தப்பட்டுள்ளன

பொது நூலகங்கள் தரப்படுத்தலின்கீழ் வடக்கு – கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களால் நடத்தப்பட்டு வருகின்ற 35 பொது நூலகங்கள் தரம் III ஆக, கொழும்பு தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக, வடக்கு – கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் து.விஜயலட்சுமி இந்த உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கு சுற்றுநிருபம் மூலம் ளஅறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் –

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை – புலோப்பளை பொது நூலகம், கரைச்சி பிரதேசசபை – கிளிநொச்சி பொது நூலகம் ஆகிய நூலகங்களும்,

யாழ்.மாவட்டத்தில் –

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை – பண்டத்தரிப்பு பொது நூலகம், பண்டத்தரிப்பு கிராம பொது நூலகம், மானிப்பாய் பிரதேசசபை பொது நூலகம், ஆனைக்கோட்டை கிராம பொது நூலகம்.

வலி.வடக்கு பிரதேசசபை – தெல்லிப்பளை பொது நூலகம், காங்கேசன்துறை பொது நூலகம், மயிலிட்டி பொது நூலகம், மல்லாகம் பொது நூலகம்.

வலி.மேற்கு பிரதேசசபை – உடுவில் பொது நூலகம்.

வலி.கிழக்கு பிரதேசசபை – உரும்பிராய் பொது நூலகம், புத்தூர் பொது நூலகம், கோப்பாய் பொது நூலகம், அச்சுவேலி பொது நூலகம், நீர்வேலி பொது நூலகங்கள் ஆகியன தரமுயர்த்தப்பட்டுள்ளன. (100)

## இளவாலை - கச்சேரி பஸ்சேவை நேர மாற்றம்; பயணிகள் விசனம்

இளவாலையிலிருந்து கச்சேரிக்குப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்ஸின் நேரம் காலை 7.15 இற்கு மாற்றப்பட்ட தால், பாதிக்கப்பட்ட பயணிகள் – பலர் ஒப்பமிட்ட கடிதமொன்றை வடபிராந்திய போக்குவரத்துச்சபை யாழ்.சாலை முகாமையாளருக்கு அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில், இளவாலைக்கும் – கச்சேரிக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 788 வழி இலக்கமுடைய பஸ்ஸின் சேவைநேரம் மாற்றப்பட்டுள்ளமையைக் குறிப்பிட்டிருப்பதுடன், சேவையில் ஈடுபடும் பஸ் பழுதடைந்தும், சிறியதுமாக இருப்பதாகவும், இதனால் அதில் அதிக பயணிகளை ஏற்றிச்செல்ல முடிவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறிப்பிட்ட இந்தக் குறைபாடுகளை நீக்கி, பஸ்ஸை வழமையான நேரத்துக்கே சேவையில் ஈடுபடுத்தி, பயணிகளின் சிரமங்களை நீக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## குருதி கழுவிய குவலயம் ஆற்றுகை

திருமறைக் கலாமன்றத்தால் ஆற்றுகை செய்யப்படவுள்ள 'குருதி கழுவிய குவலயம்' திருப்பாடுகளின் காட்சி – எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை மன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

தினமும் மாலை 7 மணிக்கு இந்தத் தவக்கால ஆற்றுகை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் சோ.ஜோண்சன் ராஜ்குமார் எழுதி, நெறியாள்கை செய்யவுள்ள குருதி கழுவிய குவலயத்தில் – 250 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குகொள்வதுடன், பிரத்தியேகமான 100 அடி நீள அரங்கிலேயே திருப்பாடுகளின் காட்சி ஆற்றுகை செய்யப்படவுள்ளது. (91)

## வெளிநாட்டு மருத்துவ குழுவினர் சேவையில் ஈடுபடவுள்ளனர்

ஸ்ரீ சத்தியசாயி பகவான் சேவா சமித்தியின் லண்டன் கிளையின் அனுசரணையுடன் – நாட்டின் பல இடங்களிலும் 90 வெளிநாட்டு வைத்தியர்கள் மருத்துவசேவையை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருத்துவ சேவையை வழங்குவதற்காக – வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, திருகோணமலை, கல்முனை, கம்புறுபிட்டி ஆகிய இடங்களில் மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு, மருத்துவ சேவைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த மருத்துவ முகாம்களில் மருத்துவ ஆலோசனைகள் மற்றும் கண்சிகிச்சைகள் போன்றன இடம்பெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாம்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை குறிப்பிட்ட இடங்களில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## பொன்னாலை பிள்ளையார் ஆலய மஹோற்சவம் இடைநிறுத்தம்

(பொன்னாலை)

பொன்னாலையில் குறிப்பிட்ட ஒரு சிலரின் விரும்பத்தகாத நடவடிக்கைகளால், பொன்னாலைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இடைநிறுத் தப்பட்டுள்ளதாக, ஆலய நிர்வாகி யால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஆலய நிர்வாகியால் எழுதி ஒட்டப்பட்டுள்ள பகிரங்க அறிவித்தலில் – சென்ற வருட திருவிழாவின்போது ஏற்பட்ட விரும்பத்தகாத சம்பவங்கள் இந்த வருடமும் தொடரும் சாத்தியக்கூறு உள்ளதால், அந்நிலைமைக்கு அஞ்சியே இந்த வருடம் ஆலய வருடாந்த மஹோற்சவம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பொன்னாலையில் அண்மைக் காலமாக இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்டு வரும் மோதல்களாலேயே இந்த வருடாந்த உற்சவம் இடைநிறுத்தப் பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

தனிப்பட்ட ஒரு குழுவின் அச்சுறுத்தலால் ஒரு கோயிலின் திருவிழா நிறுத்தப்பட்டமை ஓர் பாரதூரமான விடயம் என்றும், இந்தக் கிராம மக்கள் விசனம் வெளியிட்டனர். (207)

## கறுப்புக்கொடிகளை அகற்றுமாறு அச்சுறுத்திய படையினர்

நாயன்மார்கட்டுப் பகுதியில் இறந்த ஒருவரின் துக்கத்துக்காக கட்டப்பட்டிருந்த கறுப்புக்கொடிகளை – அந்தப் பகுதியால் ரோந்து சென்ற படையினர் துப்பாக்கியைக் காட்டி, அறுத்தெறியுமாறு அச்சுறுத்தினர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை 11.30 மணியளவில் நாயன்மார்கட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. (55)

## கற்கள் குவிக்கப்பட்டிருந்தும் திருத்தப்படாத மலர்மகள் வீதி

(யாழ்ப்பாணம்)

அரியாலை மலர்மகள் வீதியை செப்பனிடுவதற்காக கற்கள் குவிக்கப்பட்டு நீண்ட நாளாகியும் இதுவரை இந்த வீதி திருத்தப்படவில்லை என இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

நீண்டகாலமாக மிக மோசமாகச் சேதமடைந்து, குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதி திருத்துவற்காக கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு கற்கள் குவிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் இதுவரை இந்த வீதி திருத்துவதற்கான எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை, –அரியாலை சாஸ்திரியார் வீதி, நொத்தாரிஸ் வீதி என்பனவும் மிக மோசமாகச் சேதடைந்து, குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதுபற்றி இந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தும் – இதுவரை எந்தவித நடடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டவில்லை என இங்குள்ள மக்கள் விசனம் தெரிவித்தனர். (55)



யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதி வருட மாணவர்கள் சத்திரசிகிச்சை வகுப்புக்களை ஆரம்பிக்குமாறு கோரி நேற்று பகிஷ்கரிப்பு போராட்டம் நடத்துவதைப் படத்தில் காணலாம்.



புத்தளத்திலிருந்து சமாதானப் பயணத்தை மேற்கொண்ட 150 முஸ்லிம் மாணவர்கள் நேற்று யாழ். பல்கலைக்கழகத்துக்கு வந்தபோது எடுக்கப்பட்ட படம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### சட்டவிரோதமாக மணல் அகழ்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

(வடமராட்சி)

வடமராட்சியில் சட்டவிரோதமாக மண் அகழ்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென, வடமராட்சிப் பகுதி கலாசாரம் பேணும் இளைஞர் குழு தெரிவித்துள்ளது.

சைக்கிள்களில் – சாக்கு, உரப்பை போன்றவற்றில் மண்ணைக் கடத்தி வரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், இனிமேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென இந்தக் குழு தெரிவித்துள்ளது. (14)

### உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன

ஜீ.ரி.இசற் அமைப்பின் உணவு திட்டத்தின் கீழ் நேற்றைய தினம் ஊர்காவற்துறை மக்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த உணவுப் பொருட்கள் வழங்கும் வைபவம் நேற்று ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

குடும்ப அளவின் பிரகாரம் இந்த உணவுப் பொருட்கள் பங்கிடப் பட்டு வழங்கப்பட்டன.

### கோச்செங்கட்சோழ நாயனார் குருபூசை

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தால் நடத்தப்படும் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை வரிசையில், நாளை காலை 8.30 மணிக்கு கோச்செங்கட்சோழ நாயனார் குருபூசை இடம் பெறும்.

கல்லூரியில் உள்ள ஸ்ரீசோமாஸ்கந்தர் ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து, நாயனார் குறித்த ஆன்மீக உரை இடம்பெறவுள்ளது.

### தமிழ்த்தினப் போட்டிகள் குறித்த சுற்றுநிருபம் அனுப்பிவைப்பு

அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியின் இந்த ஆண்டுக்கான சுற்று நிருபத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வ ரட்ணம் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிக்கான சுற்றுநிருபம் ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டிருந்த சுற்று நிருபத்தில் –மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும், இது தொடர்பான விடயங்கள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகளின் பாடசாலைமட்டப் போட்டியை ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்பும், வலயமட்டப் போட்டிகளை மே மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பும், மாகாணப் போட்டியை ஜ"ன் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தி முடிக்க வேண்டும் எனவும் அந்த சுற்று நிருபத்தில் குறிப்பிடப் பட் டுள்ளது.

### வருடாந்த மஹோற்சவம்

கரவெட்டி யார்க்கரு விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் – எதிர்வரும் 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

24 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (14)

### சிறுவன் காயம்

கொக்குவில் பகுதியில் ஓடிக்கொண்டிருந்த லான்மாஸ்டரிலிருந்து குதித்த சிறுவன் காயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் பிடாரி அம்மன் கோவிலடி, கொக்குவிலைச் சேர்ந்த ரவீந்திரன் யசந்தன் (வயது 13) என்ற சிறுவனே காயமடைந்தவராவார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஆறு



பெயர் : சி.திவ்வியா
முகவரி : பளவத்தை, வல்வெட்டித்துறை.

அகவை ஆறு



பெயர் : ர.றெஜிபன்
முகவரி : கோண்டாவில்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------
முகவரி :------------------
பிறந்த ஆண்டு:------------------
கூப்பன்கள் பத்தும் புகைப்படமும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------
பெற்றோர் ஒப்பம்

பல்சுவை அரங்கு

# கட்டுப்பாடற்ற பறவைக்காய்ச்சல்

பறவைக் காய்ச்சல் ஒழிக்கப்பட்டு விட்டது என்று சொல்லிக்கொண்டு இருக்கின்ற இந்த நேரத்தில், புதிய வகையான பறவைக் காய்ச்சல் ஒன்று வியட்னாமில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 21 வயதுடைய ஒரு இளைஞன் இந்தவகைப் புதிய நோய்களோடு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இந்த இளைஞனுக்கு காய்ச்சல், மூச்சுவிடு வதில் சிக்கல், அத்துடன் ஈரல் அழற்சி ஆகிய நோய்களும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த வருடத் தொடக்கத்தில் 13 பேர் வரையில் இந்தப் பறவைக் காய்ச்சலால் இறந்திருக்கிறார்கள். உண்மையில் இந்த நோயைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமானால், 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் எனவும், ஆனால் 18 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டும்தான் கடந்த வருடம் ஒதுக்கப்பட்டது எனவும் வியட்னாமின் நோய்த்தடுப்புத்துறை குறை கூறுகிறது. தற்போது கோழிகள் சாப்பிடுவதை விட்டுவிட்டு, வாத்துக்களைச் சாப்பிடுவதைத் தாய்லாந்து மக்கள் விரும்புகிறார்கள். ஏனெனில், அங்கே பறவைக் காய்ச்சல்கொண்ட ஒருதொகைக் கோழிகள் காணப்படுகின்றன.



உண்மையில் சார்ஸ், பறவைக் காய்ச்சல் போன்றவை சுவாசத்தொகுதிமூலம் இவை இலகுவாகப் பரவுகின்றன.

# ஆபிரிக்காவின் கணினி

பின்தங்கிய வறிய நாடுகளை எல்லாம் உலகமயமாக்கல் என்ற பொருளின்கீழ் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் உலக வங்கி தற்போது ஈடுபட்டுக் கொண்டு வருகிறது. அதன் காரணமாக ஆபிரிக்க நாடுகளில் தற்போது தகவல் தொழில்நுட்பம் மெல்ல மெல்ல புகுத்தப்பட்டு வருவதாக உலக வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மிகவும் வறிய நிலையில் இருக்கின்ற ஆபிரிக்க நாடுகளுக்கு இது இனிப்பான செய்திதான். ஏறத்தாழ 2015 ஆம் ஆண்டளவில் 50வீதமான ஆபிரிக்க நாடுகளுக்கு, மொபைல் தொலைபேசி வசதிகளைச் செய்து கொடுக்கலாம் என, சில மொபைல் தொலைபேசி நிறுவனங்கள் கூறிவருகின்றன. ஆபிரிக்க நாடுகள் சில ஓரளவு உலகமயமாக்கலின் கீழ் வந்ததால், அது மிகவும் சுலபமாகக் கணினி உலகுடன் இணைக்கப்பட்டு இருந்தன. இதன் மூலம் இந்த நாடுகளை வைத்துக்கொண்டு பின்தங்கிய மற்றைய நாடுகளை வளர்க்கும் முயற்சியில் சர்வதேச நிறுவனங்கள் தற்போது முனைப்பாக நிற்கின்றன.



எதியோப்பியா, உகண்டா, சோமாலியா ஆகிய நாடுகளில் தற்போது கணினிகள் உண்டு. ஆனாலும் தகவல் தொழில்நுட்பம் போதாது.

# விமான சேவை

இந்தியாவின் ஜெட் எயார்லைன் எயார்வேய்ஸ் உடைய பங்குகள் சடுதியாக அதிகரித்த விலையில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. உண்மையில் ஜெட் எயார்லைன் நிறுவனமானது – பெரிதாக இலாபமீட்டக்கூடிய நிறுவனமல்ல. ஆனால் தற்போது இந்தப் பங்குகளுடைய அதிகரிப்பைப் பார்க்கும்பொழுது, விமானப் பயணத்தை மக்கள் எவ்வளவு தூரம் விரும்புகிறார்கள் அல்லது பாவிக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது. 1990 ஆம் ஆண்டில் இந்தியன் எயார்லைன் நிறுவனமானது – பெரிதாக இலாபமீட்டக் கூடிய கம்பனியாக இருக்கவில்லை. ஆனால் 1993 ஆம் ஆண்டில் இந்தக் கம்பனி ஓரளவு இலாப நோக்கில் இயங்குவதாகக் கூறப்பட்டது. இந்தக் கம்பனிக்குத் தற்போது போட்டியாக சகாரா கம் பனியும் அத்துடன் சிங்விசர் எயார்லைன்ஸ் கம்பனியும் இந்தியாவின் விமானப் போக்குவரத்துத் துறையைத் தம்மகத்தே வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஜெட் கம்பனியிடம் 42 விமானங்கள் காணப்படுகின்றன. அதிலே 271 போக்குவரத்து நாளாந்தம் நடைபெறுகிறது. இவ்வளவு காலமும் லண்டன், சிங்கப்பூர், கோலாலம்பூர் ஆகிய இடங்களுக்கு இந்தப் போக்குவரத்து நடைபெறவில்லை. தற்போது அந்தந்த அரசின் உதவியுடன் இவை தொடங்கப்பட்டுள்ளன.




# அறிவுகூடிய காகங்கள்



பறவை இனங்கள் எல்லாவற்றிலும் காகங்களுக்குத்தான் நுண்ணறிவு அதிகம் இருப்பதாகக் கனடா நாட்டு விஞ்ஞானிகள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 75 ஆண்டுகளாக நடைபெற்ற அவதானிப்புகள் மூலம், இத்தகைய முடிவு பெறப்பட்டிருக்கிறது. பறவைகள் உணவு உண்ணும் முறை, அவை கூடு கட்டும் திறன் ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்பொழுது, அவற்றின் நுண்ணறிவுத்திறன் ஓரளவு பார்க்கக் கூடியதாக இருக்கிறது. பறவைகள் சில உத்திகளைப் பாவித்து களவு எடுக்கின்றன. இது பறவைகளின் நுண்ணறிவை அளவு கோடிடுவதற்கு ஒரு சந்தர்ப்பமாகவும் கருதப்படுகிறது. சில வேளைகளில் குறித்த சில பறவையினங்கள் மட்டுமே உணவுதேடிப் பெற்றுக்கொள்கின்றன. காகங்களைப் பொறுத்தவரையில் அவை ஒரு உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற பறவைகளாதலால், அவற்றுக்கு ஒரு ஆளுமையான திறன் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

காகங்களின் நுண்ணறிவுத்திறன் வேறு எந்தெந்தப் பறவைகளுக்கு இருக்கிறது எனத் தற்பொழுது கடுமையான ஆய்வுகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

# திருமணத்தை வெறுக்கும் பெண்கள்




ஜப்பான் நாட்டுப் பெண்கள் திருமணத்தை வெறுக்கிறார்கள் என்ற கருத்து தற்போது கூறப்பட்டுக்கொண்டே வருகிறது. 10 பெண்களில் 7 பேர் திருமணத்தை வெறுக்கிறார்கள். அவர்கள் தனிமையில் இருப்பதையே இன்பமாக நினைக்கிறார்கள். 2003 ஆம் ஆண்டில் 10 வீதமாக இருந்த தனிமையானவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துக் காணப்படுகிறது. ஜப்பான் நாட்டில் காணப்படுகின்ற முக்கிய பிரச்சினை குடும்பப்பாரம். உண்மையில் அங்கே இருக்கின்ற மக்களுக்குப் பிள்ளைகளை வளர்ப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. இதற்குக்காரணம் அவர்களுக்கு அரச மானியம் கிடைப்பதில்லை. பொதுவாக எல்லா நாடுகளிலும் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்குக் கொடுக்கப்படுகின்ற மானியங்கள் கூட, அங்கே பெருமளவு கொடுக்கப்படுவதில்லை என்ற குறை இருக்கிறது. 25 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களிடம் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு மற்றும் அவர்களுடைய வாழ்க்கை முறைகள் பற்றி ஆராய்ந்து நோக்கியபோது, 1970 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியிலேயே கூடுதலான பெண்கள் திருமணத்தை வெறுத்திருக்கிறார்கள் என்பது தெரியவந்திருக்கிறது.

# அதிரடி நடவடிக்கை

ஸ்போர்ட்ஸ் கார்களை உற்பத்திசெய்வதைத் தற்போது சில நிறுவனங்கள் ஊக்குவிக்கத் தொடங்கியிருக்கின்றன. இப்படியிருக்கின்ற இந்த்வேளையில், பிரித்தானியாவைச் சேர்ந்த மோட்டார்கார் கம்பனி ஒன்று 90 வேலையாட்களை அதிரடியாகத் தனது கம்பனியிலிருந்து நீக்கியிருக்கிறது. இதற்குக் காரணம் இந்தக் கம்பனியை வாங்கிய 24 வயது மட்டுமே ஆன ரஷ்ய இளைஞன் அவருடைய கருத்துப்படி 20 வீதமான தொழிற்சாலை வேலைகளைக் கணினி மயப்படுத்துவதற்குரிய முயற்சிதான் இது எனப்படுகிறது. அவர் மேலும் கூறுகையில் – இந்தக் கம்பனியில் உள்ளவர்கள் எல்லோரும் அற்புதமான வேலைக்காரர்கள். ஆனால் அவர்கள் குறித்த நேரத்தில் வேலையை முடிக்காமல், மேலதிக வேலை நேரமாகிய ஓவர்டைம் கேட்டு, கம்பனியினுடையவளத்தையும்,வளர்ச்சியையும்பாழாக்குகின்றனர் என்கிறார். ஸ்போட்ர்ஸ் கார்கள் சர்வதேச சந்தையில் எழுச்சி பெற்றுவரும் இந்த நேரத்தில், இந்தக் கம்பனி வேகமாக ஓடுகின்ற மோட்டார் படகுகளையும், ஸ்பீட் போர்ட்களையும் உற்பத்தி செய்ய இருக்கிறது.



## திரை விமர்சனம்



### ஆயுதம்

காதல் யுத்தத்தில் பயன்படுத்தப்படும் ஆயுதமாக இந்தத் திரைப் படம் இருக்கிறது.

பிரசாந்தும், சினேகாவும் மருத் துவக் கல்லூரியின் மாணவர்கள். சினேகா குடும்பத்தைத் தாதா சுப்புராஜ் அடிமைபோலவே நடத்துகிறார். இதற்கு எதிரியாக வருகிறார் பிரசாந். தொடர்ந்து நடிப்பில் தோல் விகளைச் சந்தித்த பிரசாந்துக்கு இது வெற்றி முகம். காதல் மற்றும் அடிதடிக் காட்சிகளில் வெளுத்துவாங்கியிருக்கிறார்.

இதேபோல் சினேகாவும் ஐயர் பெண்ணாக அருமையாக நடித்திருக் கிறார். வடிவேலுவின் நகைச்சுவை மிகவும் நன்றாக இருக்கிறது. வில் லன் சுப்புராஜுற்குக் குருவாக வருகிறார் முன்னாள் நகைச்சுவை நடிகர் ஜனகராஜ்.

தினாவின் இசையில் பாடல்கள் மற்றும் பின்னணி இசை சிறப்பாக இருக்கிறது. சண்டைப்பயிற்சி கனல்கண்ணன். கனலுடன் நெருப்பும் சேர்ந்து கக்குகிறது. சங்கரின் திரைக்கதைதேவையானதுபோல காணப்படுகிறது. பழைய காலத்துக் கதையாக இருந்தாலும், அதனை மெருகூட்டித் தந்திருக்கின்றார் இயக்குனர் எம்.ஏ.முருகேஷ் உண்மை யில் இந்தப் படத்தில் சில புருடாக் காட்சிகள் வந்தாலும், நகைச்சுவை யுடன் திரைக்கதையோடு கொடுத்த இயக்குநரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆயுதம் ஏவுகணை!!

– நந்தினி –

## சுனாமி பறித்த ஆமைகள்



சுனாமியால் பாதிக்கப்பட்ட மனிதர்களை மட்டுமே நாங்கள் கணக்கெடுத்துக் கொண்டிருக் கிறோம். ஆனால் இந்து சமுத்திரத்தில் பல நூற் றுக்கணக்கான ஆமைகள் காணாமல் அல்லது இறந்திருக்கின்றன என, கடல் பற்றி ஆய்வு செய் கின்ற ஆய்வாளர்கள் கூறிக்கொண்டிருக்கிறார் கள்.

இலங்கை, தாய்லாந்து ஆகிய பிரதேசங் களில் இத்தகைய மறைவுகள் ஏற்பட்டிருப்ப தாகக் கூறப்படுகிறது. அந்தமான், நிக்கோபார் தீவுகளின் கடற்கரையோரங்களில் ஆமையினங் கள் காவு கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் தெரிவதாகக் கூறப்படுகிறது. இலங்கைக் கரை யோரங்களில் ஆயிரக்கணக்கான ஆமை முட்டைகளும் அத்துடன் சிறு குட்டிகளும் அழிந்து போயிருக்கின்றன.

சில ஆமையினங்கள் தென் கிழக்காசியாவின் கரையோரப் பிரதேசங்களில் ஒதுங்கியிருப்பதால், இவற்றைச் சில நாட்டு மிருகக் காட்சிச் சாலை களுக்கு அனுப்பக் கூடிய ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை கரையோர கடற்படையினரின் உதவியுடன் ஏறத்தாழ 2000 ஆமைகள் பாது காக்கப்பட்டிருக்கின்றன.

## நீராகாரக் சிறுமி

7 வருடங்களாக வெறும் திரவ உண வுகளை மட்டுமே சாப்பிட்டுக் கொண்டு வந்த ஒரு சிறுமி - தற்போது திண்ம உணவுகளை உண்ணத் தொடங்கியிருக் கிறாள். டில்லி மேறல் என்ற 7 வயதுடைய பெண், வயிற்றிலே காணப்பட்ட ஒருவகைச் சிக்கல் காரணமாகப் பிறப்பிலிருந்து திரவ உணவுகளையே எடுத்து வந்தாள்.

அமெரிக்காவைச் சேர்ந்த சில கனவான்களின் உதவியுடன் ஏறக்குறைய 10 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்கள் செலவழிக்கப்பட்டு கலிபோர்னியா வைத்தியசாலை ஒன்றில் கடுமையான சத்திர சிகிச்சைக்குப் பிறகு இந்தச் சிறுமி குணமாகியிருப்பதாகக் கூறப்படு கிறது. ஐரோப்பாவைச் சேர்ந்த இந் தச் சிறுமி இவ்வளவு காலமும் திரவ உணவுகளுடன் இருந்தது மிகவும் ஆச்சரியமாக இருப்பதாகக் கூறப் படுகிறது. ஆனால் இதேவேளை இந்தச் சிறுமிக்கு வயிற்றில்பொருத் தப்பட்ட ஒருவகை குழாய் நீக்கப்பட்டு, 10 நாட்களாக திண்ம உணவுகளை வைத்தியர்கள் கொடுத்து ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது வைத் தியர்களுடைய கருத்துப்படி இந்தச் சிறுமிக்கான சத்திரசிகிச்சை - எப்பவோ செய்யப்பட்டிருக்க வேண் டும். இது மிகவும் பிந்திவிட்டதாக வைத்தியர்கள் கூறுகின்றனர்.



## புதிய வால் வெள்ளி



விண்வெளி ஆய்வா ளர்கள் மிகவும் குறைந்த நட்சத்திரக் கூட்டங்கள் கொண்ட பால் வீதி ஒன் றைக் கண்டுபிடித்திருக் கிறார்கள். ஐரோப்பாவைச் சேர்ந்த கார்டிங் பல்கலைக் கழகத்தினுடைய ஒருகுழு இத்தகைய பால் வீதியைக் கண்டுபிடித்தது மட்டுமல்ல, இதை ஆராய்ந்து கொண் டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய இருண்ட பால்வீதி 50 மில்லியன் ஒளி ஆய்வுகளுக்கப்பால் காணப்படுகிறது. இதுமட்டுமல்ல, இதைப் பாவிப்பதற்கு ரேடியோ, தொலைக்காட்சி பயன் படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. 5 வருடங்களாகக் கொண்டு ஆராய்ந்த விஞ்ஞானிகளின் கருத்துப்படி, இத்தகைய புதிய பால்வீதி வி ஐ ஆர் ஜி ஒ எச் 121 என அழைக்கப்படுகிறது. இதேவேளை ஐரோப்பாவின் பல பாகங்களிலும் இந்தப் பார்வை வெளியானது. மிகவும் புதுமையைத் தருவதாகக் கூறப்பட்டுவருகிறது. ஆனால் இந்த வால் வெள்ளி அவுஸ்ரேலியா, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய இடங்களிலிருந்த மக்களுக்கும் ஒன்றும் தெரியவில்லை எனக் கூறப்படுகிறது.

## கையடக்கத் தொலைபேசிகள் பலவிதம்




நொக்கியா கையடக்கத் தொலைபேசிகள் நாளுக்கு நாள் புதிய புதிய விட யங்களைத் தாங் கியவாறு வரு கிறது. அத்துடன் நொக்கியா கம் பனி தன்னுடைய பங்குகளை கொரி யாவுக்கு விற்பனை செய்திருக்கிறது. நொக்கியா கம் பனியின் தாய் நாடு, பின்லாந்து மற்றும் ஹங்கேரி. இதேவேளை சிங்கப்பூர் கம்பனி ஒன்றும், நொக்கியா கம்பனியின் பங்குகளைவாங்கியிருக்கிறது. இந்த நிறுவனம் சில அம்சங்களைத் தானே மாற்றி, புதிய வடிவத்திலான கையடக்கத் தொலைபேசிகளை வெளியிட்டுக் கொண்டு வருகிறது. இதேவேளை உலகளாவிய ரீதியில் 2009 ஆம் ஆண்டில் நொக்கியாக் கம்பனி உலகம் முழுவதும் தனது வியாபாரத்தை விருத்தி செய்யும் என எதிர்பார்க் கப்படுகிறது.

இதேவேளை சாம்சங் மற்றும் சொனி எரிக்சன் ஆகிய கையடக்கத் தொலைபேசி நிறுவனங்கள் தங்களுடைய தொலைபேசிகளில் விடியோ மற்றும் கமராக்களைப் பொருத்தியுள்ளார்கள். ஆனால் ரேடி யோவைப் பொருத்துவதில் இந்த இரண்டுநிறுவனங்களும் தோல்வி யடைந்துள்ளன. இதேபோல எல்ஜி நிறுவனமும் ரேடியோவைப் புகுத்து வதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளன.

## புதிய ஜி எஸ் எம்

மொபைல் கம்பனிகளுக்கிடையே ஏற்பட்ட போட்டியின் உச்சக்கட்டமாக வேகமானமுறையில் கையடக்கத் தொலைபேசிகளை இயக்குவது அதா வது - டிஜிற்றல் சிக்னல்கள் மிகவும் வேகமாகச் செய்வது என்பதைச் சாத்திய மாக்குவதற்குரிய முயற்சிகளில் தற்போது 3 ஜி கம்பனி முனைப்பாக இறங்கியிருக் கிறது. இதற்குப் போட்டியாக சிமன்ஸ் கம்பனி தன்னுடைய தொலைபேசி யிலேயே சில புதியவகை உத்திகளைக் கொண்டு 3 ஜி வலையமைப்பைப் பல முள்ளதாக்குவதற்கு முனைந்து கொண் டிருக்கிறது. இத்தகைய சேர்மாற்ம் மிக வும் பலனுள்ளதாகவும் அத்துடன் வேக மாகவும், துல்லியமாகவும் சிக்னல் களைப் பெறக் கூடியதாகவும் இருக்கும் எனக் கூறப்படுகிறது.




ஏறக்குறைய 2012 ஆம் ஆண்டள வில் இத்தகைய திறமையான அதாவது– உலகம் முழுவதும் தொடர்பு கொள்ளக் கூடிய ஜி எஸ் எம் கையடக்கத் தொலைபேசி தலைப்புக்கள் உலகளா விய ரீதியில் தோன்றக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

### வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# தமிழீழ காவற்துறையினரால் விபத்துக்கள் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

(புதுக்குடியிருப்பு)

தமிழீழ காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் குற்றத் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக நேற்று முன்தினம் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தமிழீழ காவல்துறையினரின் சந்திப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகவுகளில் சைக்கிள் பாவனையின் அதிகரிப்பும், இதனால் ஏற்படும் விபத்துக்கள் பற்றியும் விபத்துக்களைத் தவிர்ப்பது தொடர்பாகவும், ஒவ்வொரு தரப்பினரும் செயற்படவேண்டிய வழிமுறைகள் பற்றியும் ஆராயப்பட்டது.

புதுக்குடியிருப்பு சிவசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் நடைபெற்ற நிகழ்வில் -

சிறப்புரைகளை தமிழீழ காவல்துறையின் நடுவப் பணியகக் கண்காணிப்பாளர் சி.மாதவன், புதுக்குடியிருப்பு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் பிறையாளன், பாடசாலை அதிபர் ஆகியோர் நிகழ்த்தினர்.

விபத்துத் தடுப்புத் தொடர்பான கருத்துரையை புதுக்குடியிருப்பு காவல்துறை பணிமனைப் பொறுப்பாளர், பரிசோதகர் சு.கிருபாகரன், உபபரிசோதகர் சி.பிரதீப்குமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலும் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்புரைகளை தமிழீழ காவல்துறையின் சீர்திருத்தப் பொறுப்பாளர் சொ.நரேன், முல்லைத்தீவு மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், கோட்டக்கல்வி அதிகாரி ஜெகநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தமிழீழ வீதிப்போக்குவரத்துச் சட்டம் தொடர்பான விளக்கங்களை - முல்லைத்தீவு காவல்துறைப் பணிமனைப் பொறுப்பாளரும் உப பரிசோதகருமான இ.றோய் காந் நிகழ்த்தினார்.

முள்ளியவளைப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் - குற்றப்புலனாய்வுப் பிரிவுக் கண்காணிப்பாளர் தே.கானகன், பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் முல்லைவீரன் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடினர்.

'விபத்து இல்லாத சாத்தியம்' என்ற தலைப்பிலான கருத்துரையை முள்ளியவளை காவல்துறைப் பணிமனைப் பொறுப்பாளரும் உபபரிசோதகருமான கெ.சிவலிங்கம் வழங்கினார்.

மல்லாவிப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் - சிறப்புரையை மல்லாவி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் புனிதன் நிகழ்த்தினார்.

மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்கான அறிவுறுத்தல்களை துணுக்காய் காவல்துறைப் பணிமனைப் பொறுப்பாளர் ப.அருள் ஜோதீஸ்வரன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் தனியார் போக்குவரத்துக் கழகத் தலைவர் மனோகரன் கலந்து கொண்டார்.

இதேபோன்று வவுனியா கனகராயன்குள மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாங்குளம் காவல்துறைப் பணிமனைப் பொறுப்பாளரும் உப பரிசோதகருமான த.கமலசிறீஸ்கரன், குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் உப பரிசோதகர் தி.பகீரதன் ஆகியோர் பொது மக்களுடன் கலந்துரையாடினர்.

இந்த நிகழ்வில் ஏ-9 வீதியில் கடந்த காலங்களில் வீதி விபத்துக்களால் ஏற்பட்ட இழப்பு விபரங்கள் சுட்டிக்காட்டப்பட்டு, விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான கருத்துகள் வழங்கப்பட்டன.

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் - கருத்துரைகளை நெடுங்கேணிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் ஜெயானந்தன், குளவிசுட்டான் வித்தியாலய அதிபர் சிவலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

விபத்துத் தடுப்புத் தொடர்பாகவும், சைக்கிள் ஓட்டுநர்கள் கடைப்பிடிக்கவேண்டிய வீதி ஒழுங்கு விதிகள் தொடர்பான கருத்துரைகளை - நெடுங்கேணி காவல்துறை பணிமனைப் பொறுப்பாளரும் உப பரிசோதகருமான திரவியநாதன் நிகழ்த்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஆயிரம் பேர்வரை கலந்து கொண்டனர். சைக்கிள் ஓட்டுநர்கள் கலந்து பயனடைந்ததுடன், இந்த வகையான கலந்துரையாடல்களை அனைவரும் பயன்பெறும் வகையில் கிராம மட்டத்திலும் நடத்தவேண்டும் என, தமிழீழ காவல்துறையினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.




## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் -08

1748: ஜேர்மனியைச் சேர்ந்த ஜோஹன் ஹான்சீன் என்பவர் முதன் முதலாக உலோகத்தினாலான பேனாக்களை அறிமுகப்படுத்தினார்.

1917 : மாபெரும் ரஷ்யப்புரட்சிக்கு வித்திட்ட நிகழ்வு நிகழ்ந்தது. ரஷ்யாவின் பீட்ரோகிராட் நகரில் நெசவுத் தொழிற்சாலைகளில் பணிபுரிந்து கொண்டிருந்த பெண்தொழிலாளர்கள் தமக்குச் சரியான உணவு கொடுக்கப்படவில்லை என்பதன் காரணமாக வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

1921: முதலாம் உலகப் போர் தொடர்பான இழப்பீட்டுத் தொகையின் முதல் தவணைக் கொடுப்பனவை - ஜேர்மனி செலுத்தத் தவறியதால் பிரான்ஸியப் படையினர் ஜேர்மனியின் பல நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

1950: அணுகுண்டு தயாரித்து விட்டதாக ரஷ்யா அறிவிப்பு செய்தது.

1963 : சிரியாவின் இராணுவப் புரட்சி நடைபெற்று இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.

1972 : 59 மீற்றர் நீளமான ஆகாய விமானம் பிரிட்டனில் பறந்து சென்றது. இருபது வருடங்களுக்குப் பின்னர்தான் ஆகாய விமானம் (ஆகாயக் கப்பல்) மீண்டும் பறக்க விடப்பட்டது.

1978 : பாகிஸ்தானின் முன்னாள் பிரதம மந்திரி பூட்டோவுக்கு லாகூர் உயர் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

1982 : ரஷ்ய இராணுவம் ஆப்கானிஸ்தானில் நச்சுப்புகை பயன்படுத்தியும், இரசாயன ஆயுதங்களைப் பாவித்தும், 3 ஆயிரம் பேர் வரை படுகொலை செய்யப்பட்டதாகவும், இவர்களது சித்திரவதை தாங்காது 30,00, 000 பேர் பாகிஸ்தானுக்கு தப்பிச் சென்றுவிட்டதாகவும் அமெரிக்க வெளிவிவகார அலுவல்கள் செனட் வெளியுறவுக் குழுவிடம் அறிக்கை செய்தார்.

* சர்வதேச மகளிர் தினம்

தொகுப்பு - சந்துரு

# நிரந்தரமாக குடியமர்த்துதல் தொடர்பான உயர்மட்ட மாநாடு

சுனாமி கடற்கொந்தளிப்பு காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்துதல் தொடர்பாகவும், 3 ஆம் கட்டமாக நிரந்தரமாகக் குடியமர்த்துதல் தொடர்பாகவும், இறுதி முடிவுகளை எடுக்கும் உயர்மட்ட மாநாடு எதிர்வரும் 10 ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் பொது அமைப்புகள், கொடையாளிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் தூயவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு

# முல்லைத்தீவில் மகளிர் சங்கம நிகழ்வு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு - மாங்குளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை மகளிர் சங்கம நிகழ்வு இடம்பெற்றது.

மாங்குளம் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - மாங்குளம் பிரதேசத்துக்குட்பட்ட அனைத்து மாதர் சங்கப் பிரதிநிதிகளும், பெண்கள் மட்ட அமைப்புகளும் கலந்து கொண்டனர்.

இதேவேளை சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் ஒலுமடு தமிழ் வித்தியாலயத்தில் பெண்களுக்கான விளையாட்டுப்போட்டி நிகழ்வு இடம்பெற்றது.

மாதர் சங்கத் தலைவி கனகேஸ்வரி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் -பொதுச் சுடரை மாங்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை மருத்துவர் கோபிகா, ஒலுமடு தமிழ் வித்தியாலய அதிபர் இராஜேந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீத் தேசியக்கொடியை மாங்குளம் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் நாகமைந்தன் ஏற்றிவைத்தார்.

முதல் பெண் கடற்கரும்புலி அங்கயற்கண்ணியின் திருவுருவப் படத்துக்கான சுடரை இரு மாவீரர்களின் தாயாரான தேவி ஏற்றிவைத்தார்.

மலர்மாலையை துணுக்காய் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பரந்தாமன் அணிவித்தார். தொடர்ந்து போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன.

## நிரந்தர வைத்தியர் இல்லை

கிளிநொச்சி - வன்னேரிக்குளம் மருத்துவமனையில் நிரந்தர வைத்தியர் இல்லாததால், நோயாளர்கள் பெரும் சிரமங்களையும், உயிராபத்தையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மருத்துவமனையில் தற்போது தற்காலிக வைத்தியர் ஒருவர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்.

இதனால் இங்கு உரிய நேரத்தில் தகுந்த சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும், இதனால் தாம் உயிராபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

## எழுத்துப் பரீட்சை

அரச கருமமொழிகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ விருத்தி பயிற்சி திணைக்களத்தால் அரச அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட அடிப்படை சிங்கள பயிற்சி நெறி தொடர்பான எழுத்துப் பரீட்சை- எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என, திணைக்கள பிரதிச் செயலாளர் சி.கிருஸ்ணானந்தன் அறிவித்துள்ளார்.

## தமிழிசை அரங்கு

தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் பங்குனி மாத சிறப்புத் தமிழிசை அரங்கு - நாளை மாலை 5 மணிக்கு கிளிநொச்சி கலை பண்பாட்டு மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கனடாவிலிருந்து வருகை தந்துள்ள தாயகத்தின் புகழ் பூத்த கலைஞர் சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கத்தின் பாட்டுக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்து தமிழிசை ரசிகர்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ நுண்கலைக் கல்லூரியினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# தமிழீழ சீர்திருத்தப் பிரிவின் செயற்பாடுகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாராட்டு!

(புது க்குடியிருப்பு)

தமிழீழ சீர்திருத்தப் பிரிவின் செயற்பாடுகளை - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பார்வையிட்டுச் சென்றுள்ளதுடன், பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறையினரின் சீர்திருத்தப் பிரிவின் செயற்பாடுகளைக் கடந்த வியாழக்கிழமை பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இதன்போது சீர்திருத்தப்பிரிவின் பொறுப்பாளர் நரேன், காவல்துறை பிரதம பரிசோதகர் சி.குணரட்ணம் ஆகியோர் சீர்திருத்தச் செயற்பாடு தொடர்பாக விளக்கமளித்தனர்.

புதுக்குடியிருப்பு சர்வதேச செங்சிலுவைச் சங்கத்தின் வதிவிட பிரதிநிதி மகிடேம்ஸ் மற்றும் பமிலா, கிளிநொச்சி வதிவிட பிரதிநிதி எவிலைன் மேயர் ஆகியோர் சீர்திருத்தப் பணி தொடர்பான விளக்கங்களைக் கேட்டறிந்து, தமது பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.





கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் கிளிநொச்சி திருநகர் பொது மயானத்தை முதலாவது படத்திலும், இந்த மயானத்துக்குச் செல்லும் வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *படம்:கடம்பேஸ்*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செயின்.*
திருக்குறள்

# நமது நோக்கு

## 'ஆனந்த' நர்த்தனம்!

கடந்த வருடம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் - யாழ்.குடாநாட்டு வாக்காளர்களால் தூக்கி வீசப்பட்ட ஆனந்தசங்கரி, கொழும்பில் இருந்தபடியே தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி தனது நிலையை தக்கவைத்துக் கொள்ள முனைகிறார்.

சிங்கள பேரினவாத ஊடகங்களுக்கும், சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளுக்கும் நெருங்கிய நண்பனாக மாறியுள்ள சங்கரியார் தெரிவித்துவரும் கருத்துக்கள் - தமிழ்த் தேசியத்தையும் ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் குழிதோண்டிப் புதைக்கும் நோக்கம் கொண் டவை.

தமிழ் மக்களால் ஜனநாயகத் தேர்தலில் நிராகரிக்கப் பட்டுவிட்டதால் - அவர்கள் மீது ஆத்திரம் கொண்டு பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்குத் துணைபோக அவர் துணிந்து விட்டார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்நிர்மாண நடவடிக்கைகளை முன்னெடுக்க, பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சூழலில் - சங்கரியார் இதுபற்றித் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் தமிழ் மக்களை சீற்றத்தின் உச்சிக்கே கொண்டு சென்றிருக்கிறது.

வடக்கு - கிழக்குப் புனர்நிர்மாணத்துக்காக பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படத் தேவையில்லையென்றும், இது நோர்வே அரசாங்கத்தின் சதியென்றும் வர்ணித்திருக்கும் ஆனந்தசங்கரியார் -

இந்த சதிமுயற்சிக்குத் துணைபோய் நாட்டைப் பலியிடக் கூடாது என்று அரசாங்கத்துக்கு ஆலோசனை வேறு வழங்கியிருக்கிறார்.

காலங்காலமாக, தமிழ் மக்களுக்காக அரசியல் விடுதலை கோரிய போராட்டங்களை நடத்தி வந்ததாகத் தம்பட்டம் அடிக்கும் ஆனந்த சங்கரியார், இப்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவே எதிர்க்கிறார் என்றால், தமிழ் மக்களுக்கு உரிமைகளுடன் கூடிய தீர்வு கிடைப்பதை எப்படி அவர் ஜீரணித்துக் கொள்வார்?

அரசியல் ரீதியாக தான் எடுக்கும் தவறான முடிவுகளை தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள் என தவறாகக் கணிப்பிட்டு, தமிழ்த்தேசியத்துக்கு விரோதமான சக்திகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டிருந்தார் இவர்.

ஆனால், தமிழ் மக்கள் அவரை நிராகரித்துவிட்டதால் - அந்த மக்களுக்கு எதுவுமே கிடைக்கக் கூடாதென்று கங் கணம் கட்டிச் செயற்படுவது 'வைக்கோல் பட்டடைக்கு காவல் நின்ற நாயின் நிலைக்கே' ஒப்பிடும் நிலைக்கு அவரை தள்ளியுள்ளது.

பொதுக்கட்டமைப்பிலோ - தமிழ் மக்களின் தேசிய அர சியலிலோ - தனக்கு எப்போதுமே இடம் கிடைக்கப் போவதில்லை என்ற யதார்த்தத்தை அவர் நன்கு உணர்ந்துகொண்டு விட்டார்.

இதனால் தமிழ் மக்களுக்கு எந்த உரிமைகளும் கிடைக்கக் கூடாது என்ற ஒரே குறிக்கோளுடன் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு துணைபோகத் தயாராகிவிட்டார்.


பொதுக்கட்டமைப்பு ஒன்று அவசியம் என - அரசாங்கம், சர்வதேச நிதிநிறுவனங்கள் எல்லாமே வலியுறுத்திக் கொண் டிருக்க - ஆனந்தசங்கரியார் மட்டும் அதை ஒரு சதியென்றும் - நாட்டைப் பலியிட எடுக்கும் முயற்சி என்றும் கூறுகிறார். இதிலிருந்து இவரது சிந்தனை, செயலெல்லாம் எந்தளவுக்கு தமிழ் மக்களுக்கு விஷமூட்டுவதாக இருக்கும் என்பதை உணரமுடிகிறது.

சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் நலனுக்காக தமிழர் நலனை குழிதோண்டிப் புதைக்கும் சங்கரியார், அவர்களுடன் இணைந்து தமிழ் மக்களுக்காக எதை யாவது பெற்றுக்கொடுக்க முடியுமா? அப்படி செய்ய அவர் நினைக்கவும் இல்லை -அதைச் செய்து விடவும் அவரால் முடியாது.

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் செல்லப்பிள்ளையாக இருந்து சங்கரியார் சாதிக்கப் போவது எதுவுமில்லை. அவர் தன்னை தமிழின விரோதி என்பதை நிறுவும் செயற்பாட்டில் தான் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறார்.

இது அவருக்கு யாழ். குடாநாட்டில் கொஞ்சநஞ்ச வாக்குகளைப் போட்டவர்களைக்கூட, கூனிக்குறுக வைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# நாடும் நடப்பும்




# தாயகம் திரும்பியோருக்கு தொழில்சார்ந்த உதவிகள்!

## ஐ.ஓ.எம். நிறுவனம் முன்வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் அகதிமுகாமில் வசித்து தாயகம் திரும்பிக்கொண்டிருக்கும் மக்களுக்கு உதவி புரிந்துவரும் புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனமான ஐ.ஓ.எம். - 2003 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து மீளவும் தாயகம் திரும்பியவர்களுக்கு தொழில் சார்ந்த உதவிகளைச் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் 2003 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாடு திரும்பியவர்கள் தங்கள் பதிவுகளை மேற்கொண்டு உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும் என புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனமான ஐ.ஓ.எம் அதிகாரி அறிவித்துள்ளார்.

யு.என்.எச்.சி.ஆர் உதவியுடன் விமானம் மூலம் வந்தவர்களும் தங்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமாயின் தங்கள் பகுதி கிராம சேவையாளர், பிரதேச செயலர் உறுதிப்படுத்திய கடிதத்துடன் இந்தியாவிலிருந்து மீள திரும்பிய திகதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன் இல.38, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஐ.ஓ.எம் அலுவலகத்தில் நேரடியாக பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நிறுவனம் இவர்களுக்கான தொழில்சார் உபகரணங்களை வழங்குவதுடன் தொடர்ந்து வரும் 6 மாதங்களுக்கு உதவிப்பணமாக ரூபா 1400 ஐயும் வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் மேற்படி நிறுவனம் இதுவரை யாழ். மாவட்டத்தில் 2004 ஆண்டில் மீளத்திரும்பியவர்களுக்கும் 2005 ஆண்டு மீளத்திரும்பி வருபவர்களுக்கும் மேற்படி உதவித் தொகையை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## பாணின் விலையை அதிகரிக்கும் வெதுப்பகங்கள் மீது நடவடிக்கை!

### நுகர்வோர் அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் இறக்குமதி செய்யும் கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளது. இன்றுமுதல் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 50 சதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இந்த மாதம் முதலாம் திகதி முதல் பிறீமா நிறுவனத்துக்கு அரசாங்கம் வழங்கிவந்த மாவுக்கான மானியம் நீக்கப்பட்டதையடுத்து அந்த நிறுவனம் மாவின் விலையை அதிகரித்ததைத் தொடர்ந்து பாணின் விலை யும் அதிகரித்துள்ளது.

ஆனாலும் அரசாங்கம் இறக்குமதிசெய்யும் கோதுமை மாவைக் கொள்வனவு செய்யும் வெதுப்பக உரிமையாளர்கள் பாணின் விலையை அதிகரிக்கக்கூடாது என நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அவ்வாறாக பாணின் விலையை அதிகரிக்கும் வெதுப்பக உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் பாதுகாப்புஅமைச்சர் ஜெயராஜ் பெனாண்டோ புள்ளே தெரிவித்தார்.

## மகளிர் தின நிகழ்வுகள்!

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இளவாலை திருமறைக் கலாமன்ற மகளிர் அவை பல நிகழ்வுகளை இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் இன்று மாலை 4.00 மணிக்கு நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலய உப அதிபர் சத்தியவாணி கிறிஸ்ரி கலந்துகொள்ளவுள்ளார்.

நடனம், கவிதை, பேச்சு, புத்தாக்க நடனம், பாடல், கலப்பு நடனம், இளைய கானம் போன்ற நிகழ்வுகளுடன் சிறப்பு நிகழ்ச்சியாக விழித்தெழுவோம் எனும் நாடகமும் இடம் பெறவுள்ளன.

## நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையால் கணினி பயிற்சி நிலையம் திறந்துவைப்பு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையினரால் நெடுந்தீவு மேற்குப் பகுதியில் கணினிப் பயிற்சி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த வருடம் நெடுந்தீவு மத்திய பகுதியில் இயங்கி வந்த இந்தப் பயிற்சி நிலையத்தை நெடுந்தீவு மேற்கு மக்களது நலன் கருதி மேற்குப் பகுதி பகல் பராமரிப்பு நிலைய கட்டடத் தொகுதியி லும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட தூரம் பயணித்து கணிணி கற்று வந்த மாணவர்கள் தற்போது தங்கள் இடத்துக்கு அருகாமையிலேயே நிலையம் அமைக்கப்பட்டுள்ளதனால் பெருமளவானோர் இதன் மூலம் பயன்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பருவகால சீட்டு பெற்றும் மினிபஸ்களில் பயணமா?

### வாசகர் நோக்கு

முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் - அதிகளவில் மாணவர்களை காலை நேரங்களில் ஏற்றிச் செல்வதால் ஏனைய பயணிகளை ஏற்றாது செல்கின்றன. இதனால் பருவகாலச் சீட்டுக்களை எடுத்துப் பயணம் செய்யும் பயணிகள் பெரும் ஏமாற்றமடைவதுடன், பின்னர் தனியார் பஸ்களில் காசு கொடுத்து பெரும் சிரமத்தின் மத்தியில் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

இந்த வீதியுஞடாக குறித்த நேரங்களில் 769ஆம் இலக்க பஸ்கள் சேவையில் ஈடுபடுவது மில்லை.

இந்த நிலையில் பாடசாலை மாணவர்களுக்கென விசேடமாக பஸ்சேவை இடம்பெறுகின்றபோதும் மாணவர்கள் அந்த பஸ்களை ஏனோ தவறவிட்டுவிட்டுப்பயணிகள் பஸ்ஸில் பயணிப்பதால் பருவகாலச் சீட்டுக்களையும் எடுத்துவிட்டு, தனியார் பஸ்களில் பயணிக்க வேண்டியுள்ளது.

குறித்த இந்த பஸ்களில் சாவகச்சேரியில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களே பயணம் செய்கின்றனர். அதிலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களே அதிகளவில் பயணம் செய்கின்றனர். இதனால் இட நெருக்கடி காரணமாக பயணிகளை ஏற்றாது செல்லும் பஸ்கள் சங்கத்தானையிலிருந்து குறைந்தளவு பயணிகளுடனேயே யாழ்ப்பாணத்துக்குச் செல்கின்றன.

இதனால் மீசாலைக்கும் அரசடிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் இருந்து அரச அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் பயணிக்கமுடியாதுள்ளது.

எனவே, பாடசாலை மாணவர்களை அவர்களுக்குரிய பஸ்ஸில் மட்டுமே பயணம் செய்வதற்கு அனுமதித்து ஏனைய பயணிகள் சிரமமின்றிப் பயணம் செய்ய பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பாடசாலை மாணவர்கள் தமக்கென சேவையில் ஈடுபடும் பஸ்களைத் தவறவிட்டு விட்டு பயணிகள் பஸ்ஸிலே பயணம் செய்யும் நிலை அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெறுவது வழமையாகிவிட்டது.

அதுவும் நகரப் பகுதி பாடசாலைகளுக்கு வரும் மாணவர்கள்தான் அதிகம். இவர்கள் தங்களுடன் எடுத்துவரும் புத்தகப் பைகள் மட்டும் இரண்டு பேர் நிற்கின்ற இடத்தைப் பிடிக்கும். இந்த நிலையில் ஏனைய பயணிகள் அதில் எப்படிப் பய ணம் செய்யலாம்?

எது எவ்வாறிருப்பினும் பாடசாலை மாணவர்கள் தமக்கென விசேட சேவையில் ஈடுபடும் பஸ்ஸில் மட்டும் பயணம் செய்யுமாறு வலியுறுத்தி ஏனைய பயணிகள் பஸ்களில் செல்ல சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பயணிகள் பஸ்ஸில் மாணவர்கள் பயணிப்பதைக் கட்டுப்படுத்தினால் அவர்கள் பாடசாலை ஒழுங்குகளையும் பின்பற்றி நேரத்துக்கு பாடசாலைக்குச் செல்வார்களல்லவா?

மீசாலை – சி.கிருபா

மொழிபெயர்ப்பு

வல்வையூரான்

# பொறியில் சிக்கிய ரத்வத்த

(சென்றவாரத் தொடர்ச்சி....)

'சேர் இன்னும் ஐந்து நிமிடங்களுக்கு மாத்திரமே பறக்க முடியும்' என விமான ஓட்டி கூற, ஹெலிகொப்டரில் இருந்தவர்களுக்கு எப்படியிருந்திருக்கும். அப்படி கூறிய போது, பெரிய ஆபத்து ஒன்றுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது என எமக்கு புரிந்து கொண்டது. ஆனால் அப்போதும் நாம் இருந்தது விடுவிக்கப்படாத உயரமான பிரதேசத்திலேயே ஆனபடியால் - ஹெலிகொப்டரை நிலத்துக்கிறக்குவது ஆபத்தானது. அதைவிட உயரமான இடத்தில் இருப்பதும் அதை விட ஆபத்தானது.

நான் நிலத்தைப் பார்த்தேன். வெற்றிடம் ஒன்று இருப்பதைக் கண்டேன். அதேபோன்று அந்த இடத்



தில் பெரிய வீடு ஒன்றும் இருந்தது. வேறு எதுவும் தெரிவதற்கு இருக்கவில்லை. ஹெலி கொப்டரை அந்த வெற்றிடத்தில் இறக்குமாறு விமான ஓட்டிக்குக் கூறினேன் என ரத்வத்த கூறினார்.

ஹெலிகொப்டர் ஓட்டிக்கு அதனைச் செய்ய முடிந்தது. வெற்றிடத்தில் ஹெலிகொப்டரை இறக்கினார்.

சிறிய வீட்டில் வசித்தவர் மிகுந்த திகைப்புக்குள்ளாகிப்போனார்கள். மெல்லிய உடலை உடைய வீட்டுத் தலைவன் முற்றத்துக்கு வந்தார். அந்த மனிதன் முதலில் கண்டது நாடாளுமன்ற உறுப்பினர் சுமதி பாலவை. கண்டவுடனேயே நாடாளுமன்ற உறுப்பினரை இனங்கண்டு கொண்டார். அவர் என்னையும் கண்டார். அவர் ஆச்சரியம் அடைந்ததை நான் கண்டேன். அவர் ஓடி நாங்கள் இருந்த இடத்துககு வந்தார்.

அந்த மனிதர் வவுனியாவுக்கு அடிக்கடி போய் வருகின்ற ஒருவர். ஆகையால் ரத்வத்தவையும், சுமதி பாலவையும் அடையாளங் காண்பது அவருக்குக் கடினமானதாக இருக்கவில்லை. சேர் என்ன நடந்தது, என்ன செய்ய வேண்டும் என்பது அந்த மனிதரின் முதலாவது வினாவாக இருந்தது. இது இடைநடுவில் அந்தரித்த எமக்கு மிகுந்த தைரியத்தைத் தந்தது.

ஜெனரல் அனுருத்த ரத்வத்த இவ்வாறு கூறினார். அந்த தமிழ் மனிதருக்கு பெயர் திருச்செல்வம். அவர் மிகுந்த கருணையுள்ளவர். அவர் முதலில் எமக்குத் தண்ணீர் கொண்டு வந்து தந்தார். நான் சேர் மாரை பலமுறை கண்டிருக்கிறேன் எனக் கூறினார். அவர் எம்மை அறிந்துகொண்டமை எமக்கு பெரும் ஆபத்து போலத் தெரிந்தது.

எங்கள் இருவருக்கு மேலதிகமாகப் படைத்தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோர் இருந்தனர். இந்த இடத்தில் ஆயுதங்களைக் தோள்களில் போட்டபடி, மரங்களில் மறைந்து கொண்டு இருந்த இளைஞர் இருவரைக் கண்டேன். அவர் எங்களைக் காண்பதற்கு முன்பு நாம் அவர்களைக் கண்டதால், ஹெலி கொப்டரில் நாம் மறைந்து இருக்க வாய்ப்பு இருந்தது.

திருச்செல்வம் கூறிய விதமாக ரத்வத்த உள்ளிட்ட குழுவினர் தரையிறங்கி இருந்தது - வவுனியாவில் இருந்து வடக்கே 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பெரியகுளம் கிராமத்திலாகும். இத்தைத் தெரிந்த பின் விமான ஓட்டி இவ்வாறு கூறினார். 'சேர் அப்படி என்றால் எமக்குப் போக முடியும்'. அந்தச் சொல் கேட்டதும், குழுவினர் மீண்டும் ஹெலி கொப்டரில் ஏறிக்கொண்டனர். ஆயினும் விமான ஓட்டிக்கு ஹெலி கொப்டரை மேலே எழுப்ப முடியவில்லை. அவர் முடிந்தளவு அணைத்து முயற்சிகளையும் எடுத்தார். ஹெலி கொப்டர் அசைந்து விட்டு நின்றது.

பல தடவை முயற்சி செய்த பின்னர் நாங்கள் போகமுடியாது என உணர்ந்து கொண்டோம். அதற்கமைய நாங்கள் மீண்டும் நிலத்தில் இறங்கினோம். ரத்வத்தைக்கு தெரியும் திருச்செல்வம் வீட்டில் அவரது மனைவியும், தாயாரும் மூத்த பிள்ளையும், ஒரு மாதம் அளவிலான குழந்தை ஒன்றும் இருந்தது. வீட்டில் விருந்தாளிகளுடன் நட்பு ரீதியாக உரையாடிக் கொண்டு இருந்தனர்.

'சேர் நான் வழியைக் காட்டுவேன், நடந்து போவோம்' எனத் திருச்செல்வம் கூறினார். வேறு மாற்று வழியில்லை. அதிகநேரம் தங்கியிருப்பதும் ஆபத்தானது. அதேபோல திருச்செல்வத்துடன் போவதும் ஆபத்தானது.

அதற்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் வந்து, பெண்களை அச்சுறுத்தி வந்த விருந்தாளிகள் யாரென அறிந்து கொள்வதற்கு வாய்ப்புண்டு. இது பயங்கரமான நிலவரமாகும்.

கடைசியாக நாங்கள் நடந்து செல்லத் தீர்மானித்தோம். அதே போன்று எமது பயணத்தில் திருச்செல்வம் குடும்பத்தையும் இணைத்துக் கொண்டோம். கைக்குழந்தையை எமது அதிகாரிகள் மாறி மாறி தூக்கி வரத் தீர்மானித்தனர். அவர்கள் மிகுந்த கருணையுள்ளவர்கள். வீட்டிலிருந்த பித்தளைக் குடத்தில் தண்ணீர் நிரப்பி தூக்கி வந்தனர்.

அந்தப் பயங்கர நடைப் பயணம் ஆரம்பித்தது அவ்வாறுதான். எல்லோரும் ஒரே தடவையில் செல்வது அதிகம் நல்லதல்ல. நாம் பிந்திச் செல்வோம். அதோ முன்னே தெரியும் மரத்துக்குக் கிட்ட எல்லோரும் சந்திப்போம் என்று ரத்வத்தை கூறினார்.

ஒரு அதிகாரி இளைய குழந்தையைக் கையில் தூக்கிக் கொண்டார். எமது பயணம் ஆரம்பமானது. நடைக்குழுவின் தலைவராக திருச்செல்வம் செயற்பட்டார். கண்ணிவெடிகள் புதைக்கப்படாத பிரதேசங்களின் ஊடாகவும், தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் அடிக்கடி செல்லாத பாதை ஊடாகவும் எம்மை அழைத்துச் சென்றார். ரத்வத்தை கை காட்டி தெரிவித்த மரத்துக்கு அண்மையாக அனைவரும் வந்தனர்.

எனது காலில் ஊனம் இருந்ததால், என்னால் வேகமாகச் செல்ல முடியவில்லை. ஆகையால் மிகவும் மெதுவாகவே நான் வந்தேன். எப்படியோ மரத்துக்குப் பக்கத்தே வந்து விட்டோம். அங்கு வந்து பார்த்த போது எமது குழுவில் இருவர் குறைந்து காணப்பட்டனர்.

அவர்களில் இருவர்தான் பொலிஸ் மா அதிபரும், அவரது பாதுகாப்பு அதிகாரியும். நாங்கள் 5 நிமிடம் காத்துக் கொண்டு நின்றோம். ஆனால் அவர்கள் வரவில்லை. 10 நிமிடம் காத்திருந்தோம் அவர்கள் வரவில்லை. ஆனால், தாமதம் ஆவதற்கு எந்தக் காரணங்களும் இல்லை.

எங்கள் எல்லோரிடமும் இருந்தது பிஸ்டல் மாத்திரமே. அது இது போன்ற சந்தர்ப்பத்தில் போதுமானது அல்ல என நாம் உணர்ந்து கொண்டோம். பொலிஸ் மா அதிபர் பிரிந்து வந்ததால் அவருக்கும், அவரது பாதுகாவலருக்கும் ஏதாவது நடைபெற்று இருக்கும் என எமக்குத் தோன்றியது.

என்ன செய்ய வேண்டும் எனத் தீர்மானம் ஒன்றும் எடுக்க முடியவில்லை. இப்போது நேரம் நண்பகல் 12.30 தாண்டியிருந்தது. எமது நடை பயணம் ஆரம்பித்தது மாத்திரமே இன்னும் அதிகமான தூரம் செல்ல வேண்டி இருந்தது.

தொடர்ந்தும் பொலிஸ் மா அதிபரின் வரவை எதிர்பார்த்துத் தொலைவில் இருந்த காட்டை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தோம் என ரத்வத்த தெரிவித்தார். பொலிஸ்மா அதிபருக்கு என்ன நடந்தது என்று அறிய அடுத்த வாரம் வரை காத்திருங்கள்.

*நன்றி - லங்காதீப*

ஆன்மீகம்

மதுரகவி. காரை எம்.பி.அருளானந்தன்

# மகா சிவராத்திரி விரதம் அனுட்டித்தால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்



**ப**க்தியும், முக்தியும் வேண்டுபவர்கள் தவறாமல் கடைப்பிடிக்கும் விரதம் சிவராத்திரி விரதம். இந்த விரதம் ஆண், பெண், குழந்தைகள், அந்தணர்கள், அந்தணர் அல்லாதார், இல்லறத்தார், துறவியர் என்ற பாகுபாடின்றி அனைவரும் பக்தி சிரத்தையுடன் கடைப்பிடிக்க வேண்டிய விரதமாகும்.

## கதைகள்:

மகா சிவராத்திரியைப் பற்றி பல புராண வரலாறுகள் வழங்கி வருகின்றன. ஒரு சமயம் பார்வதிதேவி விளையாட்டுக்காக சிவபெருமானின் கண்களைப் பொத்தினாள். சிவபெருமானின் கண்களாக சந்திரனும், சூரியனும் விளங்குகிறார்கள்.

எனவே, விளையாட்டுக்காக அம்பிகை இறைவனின் கண்களைப் பொத்தியதும் உலகமெங்கும் இருள் சூழ்ந்தது. உலக உயிர்களெல்லாம் அந்தக் காரிருளில் செய்வதறியாது கலங்கி அச்சம் கொண்டன. இந்தத் துன்பத்திலிருந்து தங்களைக் காத்தருளும்படி தேவர்கள் சிவனைப் பூஜித்து பிரார்த்தனை செய்தார்கள்.

தேவர்களின் பிரார்த்தனைக்கிணங்க சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணைத் திறந்தார்.

அப்போது அவரது நெற்றிக் கண்ணிலிருந்து பெரும் நெருப்புப் பிழம்பு தோன்றி வெளிப்பட்டது. அதைப் பார்த்து உமா தேவியார் அஞ்சினார். அம்பிகையின் அச்சத்தைப் போக்கும் பொருட்டு சிவ பெருமான் அந்த நெருப்புப் பிழம்பைச் சந்திரனின் தண்ணொளியாக மாற்றியருளினார். அந்த இரவில் சிவனைப் பூஜிக்கும் வழக்கம் ஏற்பட்டு, அதுவே சிவராத்திரியாக ஆயிற்று என்று புராண வரலாறு வழங்குகிறது.

லிங்க புராணமும் சிவராத்திரி யைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அதன்படி திருமாலும் - பிரம்மாவும் சிவபெருமானின் அடி - முடியைத் தேடிச் சென்றபோது இறைவன் ஜோதி வடிவமாகத் தோன்றினார். அந்த இரவே சிவராத்திரியாகும்.

## உபவாசம்:

யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, மாத சிவராத்திரி, பக்ஷ சிவராத்திரி, மகா சிவராத்திரி என்று சிவராத்திரி ஐந்து வகைப்படும். மாசி மாதத்தில் பௌர்ணமிக்குப் பிறகு வரும் பதின்னான்காவது நாளே மகா சிவராத்திரியாகும். சிவராத்திரி தினத்தில் உணவு உட்கொள்ளாமை, அதாவது உபவாசம் முக்கிய இடம்பெறுகிறது.

"உப" என்பதற்கு 'அருகில்' என்பது பொருள். "வாசம்" என்பதற்கு 'இருத்தல்' என்பது பொருள். எனவே சிவராத்திரி உபவாசம் என்பது வெறும் உணவு உட்கொள்ளாமையை மட்டுமன்றி, சிவன் அருகில் இருத்தல் அதாவது பக்தர்கள் அன்றையதினம் சிவன் நினைவிலேயே ஆழ்ந்து தோய்ந்திருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது.

## பாராயணம் - பூஜை

## பிரார்த்தனை:

சிவராத்திரி தினத்தில் இரவும் பகலும், நாள் முழுவதும் - பஞ்சாட்சர ஜபம் செய்தபடி சிவ தியானத்திலேயே இருப்பவர்கள் மிகவும் தலைசிறந்த முறையில் சிவராத்திரி விரதம் இருப்பவர்களாவர்.

அவ்விதம் இருக்க முடியாதவர்கள் சிவ பரம்பொருளின் சிறப்புக்களை உரைக்கும் அருள் நூல்களைப் படித்து, மனதை சிவன் நினைவிலேயே வைத்திருக்கவேண்டும்.

சிவபுராணம், தேவாரம், திருவாசகம், சிவ சகஸ்ர நாமம், சிவ மகிம்ன ஸ்தோத்திரம், சிவானந்த லஹரி, ஸ்ரீருத்ரம், லிங்கபுராணம் போன்ற சிவபரமான நூல்களை விருப்பத்துக்கேற்ப சிவராத்திரி தினத்தில் பாராயணம் செய்வது மிகவும் நல்லது.

சிவராத்திரியன்று காலையில் நீராடி தூய ஆடை அணிந்து "சிவ பெருமானே" இன்று சிவராத்திரி விரதம் இருக்க விரும்புகிறேன். அதற்கு உகந்த மன நிலையையும், சூழ்நிலையையும் தந்தருள்வாய். காமம், கோபம், மோகம் போன்ற விரோதிகள் என்னை அணுகாமல் இருக்க அனுக்கிரகம் செய்வாய்" என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்யவேண்டும்.

இதுபோன்ற இறைவனின் துணையை - பாதுகாப்பை நாடும் பிரார்த்தனைகளை நாள்தோறும்கூட காலையில் செய்வது நல்லது.

பிறகு பகல் முழுவதும் ஜபம், தியானம், நாம சங்கீர்த்தனம், பாராயணம் போன்றவற்றில் ஈடுபடவேண்டும்.

மாலையில் வீட்டில் சுத்தம் செய்த இடத்தில் அல்லது பூஜையறையில் சிவபெருமானின் படத்தையோ அல்லது சிவலிங்கத்தையோ ஒரு பீடத்தில் அலங்கரித்து பிரதிஷ்டை செய்ய வேண்டும்.

இரவு நான்கு ஜாமமும் தவறாமல் சிவபூஜை செய்யவேண்டும். மாலை ஆறுமணி முதல் அடுத்த நாள் காலைவரை பூஜை செய்ய வேண்டும்.

இரவு 11.30 மணிமுதல் 1 மணி வரையுள்ள காலம் "லிங்கோற்பவ காலம்" எனப்படும். இதுவே மாலும் அயனும் இறைவனின் அடி - முடியைத் தேடிச்சென்றபோது, இறைவன் ஜோதிப்பிழம்பாக விஸ்வரூபம் கொண்ட நேரமாகும்.

இரவு முழுவதும் கண் விழித்திருக்க முடியாதவர்கள் குறைந்த பட்சம் "லிங்கோற்பவ" காலத்திலாவது கண்டிப்பாகக் கண்விழித்து சிவ பூஜை செய்யவேண்டும்.

## அபிஷேகப் பொருட்கள்:

'சிவன் அபிஷேகப் பிரியர். அம்பிகை ஸ்தோத்திரப் பிரியை, விஷ்ணு அலங்காரப் பிரியர் என்பது ஐதீகம். எனவே, சிவ பூஜையில் அபிஷேகம் முக்கிய இடம் பெறுகிறது. சிவராத்திரி இரவின் நான்கு ஜாமத்திலும், நான்கு விதமான அபிஷேகங்கள் நடைபெறும். முதல் ஜாமத்தில் பஞ்ச கவ்யத்தால் அபிஷேகம் செய்யப்படவேண்டும். (பால், தயிர், நெய், பசுஞ்சாணம், கோ ஜலம் சேர்த்து பஞ்சகவ்யம் எனப்படும்)

இரண்டாவது ஜாமத்தில் பஞ்சாமிர்தத்தால் அபிஷேகம் செய்வார்கள். (பால், தேன், பழம், நெய், கற்கண்டு கலந்தது பஞ்சாமிர்தமாகும்)

மூன்றாவது ஜாமத்தில் கொம்புத் தேனால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

நான்காவது ஜாமத்தில் கருப்பஞ்சாற்றினால் அபிஷேகம் செய்வார்கள். ஆனால் இன்று நடைமுறையில் பலரும் பால், தயிர், நெய், தேன் ஆகியவற்றையே நான்கு ஜாம அபிஷேகங்களுக்கும் பயன்படுத்தி வருகிறார்கள்.

நான்கு ஜாமத்திலும் கங்கை நீரினால் அபிஷேகம் செய்வது விசேஷம்.

சிவராத்திரி இரவில் கண் விழிக்காதவர்கள் புண்ணிய நாளில் இறைவனை நினைப்பதால் பெறும் பெரும் நன்மைகளை மட்டும் இழக்கிறார்கள். ஆனால் கேளிக்கைகளில் ஈடுபடுகிறவர்களோ இறைவனை நினைப்பதால் பெறும் நன்மைகளையெல்லாம் இழப்பதுடன், பெரும் பாவத்துக்கும் ஆளாகிறார்கள். எனவே சைவர்களாகிய நாம் எமது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை இந்தச் சிவராத்திரி நன்நாளில் நான்கு ஜாமமும் பூஜித்து நலம்பெறுவோம். ✦

# தவக்கால நற்சிந்தனை

**'நீங்கள் வெள்ளையடித்த கல்லறைகளுக்கு ஒப்பானவர்கள்.'** **(மத். 23:27)**



*வெளிவேடமும், நடிப்பும் தீய வாழ்வுக்குக் காரணங்களாக அமைகின்றன. இதனால்தான் இயேசு மனந்திருந்தி வாழும்படியாக 'வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்' என்றார் ஆண்டவர். காரணம் பலஸ்தீனத்தில் கல்லறைகள் சாலை ஓரமாகவே இருக்கும். பாஸ்கா விழாவுக்கு வருவோர் அவற்றை மிதித்துவிடாமலும், தீட்டுப்படாமலும் இருக்க எல்லாக் கல்லறைகளுக்கும் வெள்ளை அடிப்பார்கள். ஆனால் கல்லறைக்குள் என்ன இருக்கும் என்பது நமக்குத் தெரியும். இதுபோல பரிசேயரின் உள்ளம் கயமை, பொறாமை, பொய்மை, அநீதி, ஆணவம் போன்றவற்றால் நிறைந்திருந்தாலும், பொது வாழ்வில் நீதிமான்களாக, நேர்மையாளர்களாகக் காட்டிக்கொள்வார்கள். இதனால்தான் இயேசு அன்று அவர்களை எச்சரித்தார். ஆனால் இன்றும் இது எமக்குப் பொருந்தும். இயேசு கூறிய இந்த அளவுகோலின் மூலமாக எந்த அளவுக்கு நாம் உண்மையுள்ளவர்களாகவும், போலித்தனமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்?*

மோ. தார்சீசியஸ்

# ஈராக்கில் நடந்த தாக்குதல்களில் 7 படையினர் உட்பட 10 பேர் பலி!



ஈராக்கில் இருவேறு இடங்களில் கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலாவது தாக்குதல் சுனி மற்றும் ஷியா முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுபா நகரிலுள்ள இராணுவ சோதனைச்சாவடி மீது நடத்தப்பட்டது. இதில் ஐந்து படையினர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஐவர் படுகாயமடைந்தனர். இந்தச் சோதனைச் சாவடி மீது கிளர்ச்சிவாதிகள் சிறியரக ஆயுதங்கள் மற்றும் மோட்டார்களினால் தாக்குதலை நடத்தியதாக படையினர் தெரிவித்தனர்.

இரண்டாவது தாக்குதல் பாக்தாத்தின் வடகிழக்குப் பகுதியில் நடத்தப்பட்டது. இங்கு இடம்பெற்ற பாதையோரக் குண்டுவெடிப்பில் சிக்கி 3 பொதுமக்கள் உட்பட ஐவர் கொல்லப்பட்டதுடன் 18 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலின் பின்னர் தலைநகரின் மத்தியபகுதியை இலக்கு வைத்து கிளர்ச்சிவாதிகள் மோட்டார் தாக்குதலை நடத்தியபோதிலும், எந்தவித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லையெனத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை ஈராக்கில் புதிய அரசொன்றை நிறுவுவதற்கான பேச்சுக்கள் அரசியற் கட்சிகளிடையே தொடர்ந்து இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தையில் தாம் ஜனாதிபதி பதவியை எதிர்பார்ப்பதாக குர்திஷ் கட்சிகளின் கூட்டணி தெரிவித்துள்ளது. பிரதமர் பதவிக்காக ஏற்கனவே ஷியா டாவா கட்சியின் தலைவர் இப்ராகிம் ஜபாரியின் பெயர் முன்வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற சபாநாயகர் பதவி சுனி இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படவுள்ளது. இதேவேளை இந்தத் தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

# பலஸ்தீன ஆயுதபாணிகள் தாக்குதல் இரண்டு இஸ்ரேல் படையினர் காயம்

(டெல் அவிவ்)

மேற்குக் கரையின் கெப்ரோன் நகரில் பலஸ்தீன ஆயுதபாணிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு இஸ்ரேல் படையினர் காயமடைந்துள்ளதாகவும் இதில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இந்தத் தாக்குதல் இந்த நகரத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள இஸ்ரேல் இராணுவ நிலைமீது மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

600 யூத குடியேற்றவாசிகளின் பாதுகாப்புக்காக ஹெப்ரோனில் நூற்றுக்கு மேற்பட்ட இஸ்ரேல் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். இந்த நகரத்தில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பலஸ்தீனர்களும் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதலையடுத்து அந்த நகர்மீது இஸ்ரேல் இராணுவம் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. இதேவேளை மேற்குக் கரையில் தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை பலஸ்தீனத்திடம் கையளிப்பது தொடர்பாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சாஉல் மொபாஸ் – பலஸ்தீன தலைவர் மஃமூட் அபாஸுடன் இன்று கலந்துரையாடலை நடத்தவுள்ளார்.

# பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால் அணு ஆயுதத்திற்கு தேவையான திரவ எரிபொருளை தயாரிப்போம்!

## எச்சரிக்கின்றது ஈரான்



ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைவிதித்தால் அணு ஆயுதம் தயாரிப்பதற்குத் தேவையான திரவ எரிபொருளைத் தயாரிப்போம் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க முயற்சி செய்வதாகவும், அதனைக் கைவிடவேண்டும் என்றும் இல்லாவிட்டால் அந்த நாட்டின்மீது போர் தொடுப்பது உட்பட ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமெரிக்கா தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் அமெரிக்க முன்னாள் வெளியுறவுச் செயலர் கொலின் பவல் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் ஈரான் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது –

ஈரான் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது என்றபோதிலும் அதைப்பற்றி இப்போது யோசிக்கத் தேவையில்லை. பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முயற்சி நடந்துவருகிறது.

அணு ஆயுதம் தயாரிக்கக் கூடாதென ஈரானை வலியுறுத்தும் முயற்சியில் சர்வதேச சமூகம் ஒன்று சேர்ந்துள்ளது எனத் தெரிவித்தார்.

அணு ஆயுதம் தயாரிப்பதை ஈரான் கைவிடவேண்டுமானால் ஈரானுக்கு நிதி உதவி அளிக்கவேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக உடன்பாடு ஏற்பட பல வாரங்கள் செல்லுமென அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர். இதேவேளை யுரேனியத்தை செறிவூட்டும் முயற்சியை தற்காலிகமாக ஈரான் நிறுத்தியுள்ளமை, குறிப்பிடத்தக்கது.

# இரண்டு மாத குழந்தை சீனாவில் பேசும் அதிசயம்

உலகில் எத்தனையோ அதிசயங்கள் நிகழ்கின்றன. சீனாவில்2 மாதக் குழந்தை பேசுவது மருத்துவ உலகையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது. சீனாவின் தலைநகரான பீஜிங்கைச் சேர்ந்த வாங் என்பவருக்கு 2 மாதங்களுக்கு முன் ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது.

கை, கால்களை உதைத்து குழந்தை சிரித்ததும் பெற்றோர்கள் மகிழ்ந்தனர். தங்கள் அன்புக் குழந்தைக்கு நாய் என்று பெயர் சூட்டினார்கள். (இப்படியும் பெயர் வைப்பார்களா? என்று நினைக்கவேண்டாம் சீன மொழியில் நாய் என்றால் பால் என்று அர்த்தம்)

குழந்தை பிறந்து 2 மாதத்திலேயே அதன் செயற்பாட்டில் மாற்றம் தெரிந்தது. பொதுவாக குழந்தை பசித்தால் அழும். ஆனால், இந்தக் குழந்தை பேசுகிறது. பசி எடுத்ததும் சீன மொழியில் பால் தா என்று கேட்கிறதாம். 2 மாதத்திலேயே தங்கள் குழந்தை பேசியதும் அதிர்ச்சியடைந்த பெற்றோர் குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றனர். டொக்டர்கள் குழந்தை பேசியதைப் பார்த்து இது அதிசயமான செயல் என்று ஆச்சரியப்பட்டனர்.

இதேபோல் பீஜிங் நகரைச் சேர்ந்த ஹேஜீங்கே (வயது 53) என்பவர் 4 சிறுநீரகத்துடன் வாழ்கிறார். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் அவர் மருத்துவப் பரிசோதனைக்குச் சென்றபோது 4 சிறுநீரகம் இருப்பதை டொக்டர்கள் கண்டுபிடித்தனர். சாதாரணமாக மனிதர்களுக்கு இரண்டு சிறுநீரகந்தான் இருக்கும். இவருக்கு கூடுதலாக இரண்டு சிறுநீரகங்கள் இருப்பதைப் பார்த்து டொக்டர்கள் அதிசயித்தனர்.

4 சிறுநீரகத்துடன எந்தப் பிரச்சினையும் இல்லாமல் வாழும் ஹேஜீங்கே இப்போது தனது 2 சிறுநீரகங்களைத் தானம்செய்ய முன்வந்துள்ளார்.

இதேவேளை –

அன்வாங் நகரில் உள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் சமையலுக்காக முட்டையைக் கொண்டுவந்தனர். அதில் ஒரு முட்டையில்4 செ.மீ நீளத்துக்கு வால்முளைத்து இருந்ததை சமையல்காரர் பார்த்துவிட்டார். அந்த முட்டையை அவிக்காமல் பத்திரமாக எடுத்து குஞ்சுபொரிக்க வைத்துள்ளார். பொரிக்கும் குஞ்சு எப்படி இருக்கும் என்பதைப் பார்க்க அவருக்கு ஆசையாம்.

குழந்தை, முட்டையில் அதிசயத்தைப் பார்த்த சீன மக்களிடையே திருமண திகதிக்கும் போட்டி நிலவுகிறது. திருமண திகதியை மறந்துவிடாமல் இருப்பதற்காக மே மாதம் (20.05.05 - 05.05.05) ஆகிய திகதிகளை பேன்சி திகதிகளாக கருதுகிறார்கள்.

இந்த இரண்டு திகதிகளிலும் திருமணம் செய்வதற்காக போட்டா போட்டி நிலவுகிறது. திருமண பதிவு அலுவலகத்தில் இந்த திகதிகளைக் கேட்டு இலட்சக்கணக்கில் மனுக்கள் குவிந்துள்ளதாம்.




# இந்தியாவில் தாக்குதல் நடத்தவிருந்த மூன்று கிளர்ச்சிவாதிகள் சுட்டுக்கொலை



(புதுடெல்கி)

டெல்கியில் கடந்த சனிக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட மூன்று தீவிரவாதிகள் பெங்களூரில் தற்கொலைப்படை தாக்குதலை நடத்த திட்டமிட்டிருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்து செயற்படும் லஸ்கர் - இ -தொய்பா இயக்க தீவிரவாதிகள் தலைநகர் டெல்கிக்குள் ஊடுருவியிருப்பதாக புதுடெல்கி பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் காஷ்மீரில் இருந்து ஹகித் ஹூசைன் என்ற அபுபைசல் (வயது 22) என்பவர் வெடிபொருட்களுடன் டெல்கி வருவதாக கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் உஷார்படுத்தப்பட்டனர். அதன்படி கடந்த சனிக்கிழமை டெல்கி வந்த ஹமித் ஹூசைன் தனது சகாவான முகமது சரிக் (வயது 24) என்பவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது பொலிஸார் அவர்களை மடக்கிப் பிடித்தனர்.

ஹமித ஹூசைன் வைத்திருந்த பையை சோதனை இட்டபோது அதில் 10 கிலோ ஆர். டி.எக்ஸ் வெடிமருந்து இருந்தது தெரியவந்தது. இதை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தியபோது தென் மேற்கு டெல்கி சுரஜ் விகார் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தங்கி இருக்கும் 3 லஸ்கர்–இ–தொய்பா தீவிரவாதிகளிடம் ஒப்படைப்பதற்காக வெடிமருந்தைக் கொண்டு செல்வதாக ஹமித் ஹூசைன் கூறினார்.

இதைத் தொடர்ந்து பொலிஸார் அன்றிரவே அங்கு சென்று குறித்த வீட்டை சுற்றி வளைத்தனர். இதை அறிந்ததும் வீட்டுக்குள் இருந்த மூன்று தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு பொலிஸாரும் சுட்டனர். சுமார் ஒரு மணி நேரம் நடந்த இந்த துப்பாக்கி சண்டையில் மூன்று தீவிரவாதிகளும் உயிரிழந்தனர்.

அவர்களில் பிலாவால் (வயது 24) ஷநவாஸ் (வயது 25) என்ற இரண்டு தீவிரவாதிகள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் எனவும் ஷாமீஸ் என்ற பர்வேஸ் அகமட் (வயது 26) பீகார் மாநிலம் பட்னாவைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்தது.

அவர்கள் தங்கி இருந்த வீட்டில் இருந்து மூன்று ஏ.கே-56 ரக துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், 100 கிலோ ஜெலட்டின் வெடி பொருட்கள் செயற்கைக்கோள் கையடக்கத் தொலைபேசி, இந்தியப் பணம் ரூபா. 24 500 ஆகியவற்றையும், பிலாவாலின் பாகிஸ்தான் அடையாள அட்டை பாஸ்போட் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.

சுட்டுக்கொல்லப்பட்ட மூன்று தீவிரவாதிகளும் கடந்த செப்ரெம்பர் மாதம் நோபாள தலைநகர் காத்மண்டுவுக்கு சென்று லஸ்கர் - இ - தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த அப்துல் அஜிஸ் என்ற தீவிரவாதியைச் சந்தித்து பேசியுள்ளனர். இந்தியாவில் எங்கெங்கு தாக்குதல் நடத்தவேண்டும் என்பது பற்றிய விபரங்களை அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி இந்தத் தீவிரவாதிகள் உத்தராஞ்சல் மாநில டேரா டூனில் உள்ள இந்திய ராணுவ பயிற்சிக் கல்லூரி மற்றும் பெங்களூரில் உள்ள கணினி நிறுவனங்கள் ஆகியவை மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருந்தமை தெரியவந்துள்ளது.

# மாமல்லபுரம் கடலில் புராதன பொருட்கள்!

## இந்திய தொல்லியல்துறை தகவல்

(சென்னை)

மாமல்லபுரம் பகுதி கடலுக்கடியில் புராதன பொருட்கள் புதையுண்டிருப்பதாக தொல்லியல் ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

மாமல்லபுரம் சிற்பக் கோவிலுக்கு 500 மீற்றர் தொலைவில் இந்தியக் கடற்படையுடன் தொல்லியல் துறையினர் மேற்கொண்ட ஆராய்ச்சியில் பல அரிய புராதனப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக டெல்கியைச் சேர்ந்த தொல்லியல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஏ.கே.திரிபாதி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

பாதுகாப்பு நிவாரணப் பணிகளில் ஈடுபடுவது மட்டுமன்றி, தொல்லியல்துறையுடன் இணைந்து ஆழ்கடல் ஆராய்ச்சிப் பணிகளையும் கப்பல்படை மேற்கொள்கிறது.

2001 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் இத்தகைய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பிங்காரன்தீவு மற்றும் லட்சத் தீவுகளில் இத்தகைய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுக்காக 12 பேரடங்கிய ஆழ்கடல் நீச்சல் நிபுணர் குழு பயன்படுத்தப்பட்டது. மாமல்லபுரத்தைச் சுற்றி 2500 சதுரமீற்றர் பரப்பளவுக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பகுதியில் 6 மீற்றர்முதல் 8 மீற்றர் ஆழம்வரை ஆய்வு நடத்தப்பட்டது. ஆராய்ச்சியில் புராதன காலத்தின் பானைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் சில அழகிய வண்ணப் பூச்சுக்களால் ஆனவையும் அடங்கும்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
18 ☆ 01 ☆ 1970



மறைவு
06 ☆ 02 ☆ 2005

அமரர்

**திருமதி அருள்வாணி ஆனந்தராசா**

(திதி : 08.03.2005)

ஒரு மரத்துப் பறவைபோல்
பாடித் திரிந்தோமே....
காலனவன் கடுகதியில் உன்னை
பாதியிலே பரலோகம் அழைத்தனால்
எம் நெஞ்சு புண்பட்டு நிக்குதம்மா
நீ இன்று மறைந்தாலும் உன் நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு அழியாது

தகவல்:
அருள் ஈசனின் தாய், சகோதரர்கள்
நோர்வே நண்பர்கள்

(1079)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மருத்துவபீட மாணவர்கள் பகிஷ்கரிப்பில் குதித்தனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதி வருட மாணவர்கள் நேற்று தமது சத்திர சிகிச்சைக்கான கற்றல் வகுப்புகளை மீள ஆரம்பிக்குமாறு கோரி தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து போராட்டத்தில் குதித்தனர்.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக வாசலின் முன் ஒன்று கூடி தமது போராட்டத்தை மாணவர்கள் ஆரம்பித்தனர். தமக்கு சத்திர சிகிச்சைக்கான கற்றல் வகுப்புகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் இல்லையேல் தாம் தமது விரிவுரைகளை தொடர்ச்சியாக பகிஷ்கரித்து தொடர்போராட்டத்தில்ஈடுபடவுள்ளதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மருத்துவ பீட மாணவர்கள் தமக்கு சத்திர சிகிச்சைக்கான கற்றல் வகுப்புகளை மீள ஆரம்பிக்குமாறு பல்கலைக்கழக துணைவேந்தரிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், தமது போராட்டத்திற்கு தகுந்த தீர்வு கிடைக்காத நிலையில் போராட்டத்தினை விஸ்தரிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## அரசியற்துறை அலுவலகத்தில் பொலிஸார் அத்துமீறல்!

**– கண்காணிப்பு குழுவிடம் முறைப்பாடு**

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்திலுள்ள அரசியற்துறை செயலகத்துக்குள் எட்டுப் பேர் அடங்கிய பொலிஸார் குழு– அத்துமீறிப் பிரவேசித்து தேடுதல் நடத்தியதாக விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறை யினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய் துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசியற் துறையினர் நேற்றிரவு தகவல் தருகையில் –

நேற்றுக் காலை 10.45 மணியளவில் கொடிகாமம் அரசியற்துறைச் செயலகத்திற்கு வந்த எட்டுப்பேரடங்கிய பொலிஸ்குழு அங்கிருந்த பணியாளர்களின் ஆட்சேபனையையும் மீறி அலுவலகத்தைப் பார்வையிட்டனர்.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வாகனத்தில் வந்திறங்கிய பொலிஸார் அங்கிருந்து நடந்து சென்று கொடிகாமம் அரசியற்துறை செயலகத்தை சோதனையிட்டனர். பின்னர் முகமாலைப் பக்கமாக வாகனத்தில் திரும்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

முன் அனுமதியின்றி அத்துமீறி பொலிஸார் நடந்து கொண்டமை குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் யாழ். மாவட்ட அரசியற் துறையினர் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர்.

## உலகவங்கி பிரதிநிதி மீது அரசு விரைவில் நடவடிக்கை!

**–லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு**

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உத்தியோகபூர்வமற்ற அரசு இருப்பதாக கருத்து வெளியிடுவதற்கு பீற்றர் ஹரோல்டிற்கு எவ்வித உரிமையுமில்லையென வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் கட்டுமானத்திற்கு 6 பில்லியன் டொலர்களை வழங்குவதற்கு உலக வங்கி தீர்மானித்துள்ளதாக இலங்கைக்கான உலக வங்கி பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் ஆங்கில வார இதழுக்கு வழங்கிய பேட்டி தொடர்பாகவே அமைச்சர் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது –

சர்வதேச அமைப்பின் அதிகாரி ஒருவருக்கு தனது எல்லையை மீறி இறைமையுள்ள அரசுக்கு தீங்கு ஏற்படுத்தக் கூடிய அறிக்கையை வெளியிடுவதற்கு எந்தவித உரிமையும் இல்லை.

கண்டிக்கத்தக்க இவரது அறிக்கை தொடர்பாக அரசாங்கம் விரைவான நடவடிக்கை எடுக்குமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## மாவுக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கம்!

(யாழ்ப்பாணம்)

கோதுமை மாவுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக விலைக் கட்டுப்பாட்டு பகுதியினர் அறிவித் துள்ளனர்.

பிறிமா நிறுவனம் கோதுமை மாவின் விலையை உயர்த்தியதால் கோதுமை மாவுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலை நீக்கப்படுவதாக விலைக்கட்டுப்பாட்டு பகுதி யினர் தெரிவித்தனர்.

## முக்கிய கலந்துரையாடல்!

மா விநியோகம் சம்பந்தமாகவும் அதன் விலைத் தளம்பல் தொடர்பாகவும் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று மலை 3.00 மணியளவில் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்க சமாசத்தில் நடைபெறவிருப்பதால் அனைத்து ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கேட்டுள்ளார்.

## ஆயுதக் குழு உறுப்பினர் சுடப்பட்டுக் காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு – வாழைச்சேனையில் நேற்றிரவு ஆயுதக்குழு உறுப்பினர் ஒருவர் இனந் தெரியாத நபர்களின் துப்பாக்கி சூட்டில் காய மடைந்தார்.

காயமடைந்த நபர் பொலநறுவ குடாப் பொக்கனையைச் சேர்ந்த சிவராசா ரவீந்திரன் (வயது 20) எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெலிக்கந்தவிலிருந்து வாழைச்சேனைக்கு பஸ்ஸில் வந்திறங்கிய இவர், இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போவுக்கு அருகில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு சுடப்பட்டதாகத் தெரியவருகிறது.

தலையிலும் கையிலும் காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் பொலிஸ் பாதுகாப்புடன் தற்போது பொலநறுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

## பொதுக் கட்டமைப்பை...

உருவாக்கவேண்டும். விடுதலைப் புலிகளுடனான இந்தப் பொதுக் கட்டமைப்பு வடக்கு – கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்ப பெரிதும் உதவுமென நான் நம்புகிறேன்.

அத்துடன், நேரடியான பேச்சுவார்த்தைகள் மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப பெரிதும் உதவுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கப்பட்ட நாட்டின் ஒருபகுதி மக்களின் உதவிகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் பல வழிகளில் அரசாங்கத்துடன் இணைந்தே செயற்படுவதாக ஜனாதிபதி சந்திரிகா – வெளிவிவகார ஆணையாளரிடம் தெரிவித்தார்.

அத்துடன், ஒஸ்லோ உடன்படிக்கையின்படி இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு எட்டுவது தொடர்பாக ஜனாதிபதி விளக்கமளித்ததுடன், இந்த அடிப்படையில் பேச்சுக்கள் மிக விரைவிலோ அல்லது காலம் தாழ்த்தியோ தொடங்கும் எனவும் தெரிவித்தார்.

எவ்வித இழுத்தடிப்பும் இல்லாமல் விடுதலைப் புலிகள் மீண்டும் நேரடிப் பேச்சுவார்த்தைக்கு திரும்புவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் அவர்கள்மீது அழுத்தத்தை பிரயோகிக்கவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா – வெளிவிவகார ஆணையாளரிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நடந்த இந்தச் சந்திப்பில் அவரது செயலர் கருணாரட்ன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலிககார சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை வெளிவிவகார ஆணையாளர் பெரேரா வோல்ட்னர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

## கிழக்கு...

நடவடிக்கைகளை மேற்கொள்வது – கூடுதலான போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களை நிலைநிறுத்துவது தொடர்பாகவும் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## யாழ். மாணவர்...

நேற்று யாழ். நகரில் மாணவர் சமூகத்தினால் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் ஆகியோர் நல்லூர் கோவில்பின் வீதியில் ஒன்றுகூடி பதாதைகளை ஏந்தியவாறு காலை 11.30 மணியளவில் யாழ். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர்.

சிங்கள அரசே தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பைக் கைவிடு, மாணவர்கள் மத்தியில் தாக்குதல் நடத்துவதை உடன் நிறுத்து, ஜனாதிபதியே மாணவி ஒருவரின் உயிர் 5 லட்சமா? எம்மை வலிந்து தாக்காதே, சிங்கள அரசே பின் விளைவை நீ தாங்கமாட்டாய் போன்ற கோசங்களை எழுப்பியவாறு பேரணி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தை சென்றடைந்தது. அங்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கான மகஜர்களை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார், தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர், தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதியிடம் கையளித்தனர்.

இந்த மகஜர் கையளிப்பு வைபவத்தில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் –

இராணுவ உழவு இயந்திரம் மாணவி மீது மோதிய சம்பவம் தொடர்பாகவும், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெற்றுவருவதாகத் தெரிவித்தார்.

இந்தக் கண்டனப் பேரணியில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்திலிருந்து...

மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த இந்த 50 பேரில் 25 பேர் பெண்கள் என்றும் அவர்களில் சிலர் யுவதிகள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளிக் கிழமை இரவுமுதல் ஞாயிறு இரவு வரை உணவு தண்ணீரின்றி மணற்திட்டில் இவர்கள் தவித்ததாகவும் அறியவருகிறது.

நேற்று மாலை மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இத்ன் போது இளம் பெண் ஒருவர் பலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக மன்னார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனை அடுத்து அகதிகள் அனைவரையும் உடனடியாக விசாரணை செய்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதை அறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ந்து விசேட பொலிஸ் குழுவினர் நடத்திய விசாரணையின் போது இனந்தெரியாத மூவர் படகொன்றில் சனிக்கிழமை இரவு வந்து துப்பாக்கி, கத்தியைக் காட்டி பயமுறுத்தி இளம் பெண் ஒருவரை வேறு ஒரு மணற் திட்டிற்கு கூட்டிச் சென்று வல்லுறவுக்குட்படுத்தியதாக பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட நீதிவானின் உத்தரவின் பேரில் பாதிக்கப்பட்ட இளம் பெண் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.





இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சர்வதேச மகளிர் தினம் - 2005

"ஒளியும் இருளும் உலகின் விதி ஒளி மட்டும்
உங்களிடம் இருக்கட்டும். இருள் வேண்டாமென
ஒளி கொடுத்த தந்தையே!
மயங்கும் மனங்களின் மாயங்கள் தாண்டி
எரியும் நம்பிக்கைச் சுடர் ஒன்று தந்த தலைவனே!
ஒளிக்கும் ஒளியாக, அவர்கள் பட்ட துயருக்கு விடிவாக,
திறனுக்கும் திறனாக, திறமையே வாழ்வாக
அர்த்தம் கொடுத்த தாய்மையே! எங்கள் தமிழ்ச் சூரியனே!
உமக்கு முதல் என் வந்தனங்கள்"
ஏனெனில் இன்றைய நாளுக்கு செயல்வடிவம் கொடுத்த
செயல்வீரன் நீர்.

## ஒளிவீச் சூரியனால்



## ஒளிவிடுத்த சூரிய நிலாக்கள்

செல்வி பத்மநாதன்.

அழகான உலகத்தை ஆண்டவன் சிருஷ்டித்தான். அதில் ஆணையும் பெண்ணையும் சமத்துவமாகப் படைத்து விட்டான். அதை உணர்த்திடவே அர்த்தநாரீஸ்வராகவும், ஆதாம் ஏவாளாகவும் உருமாறினான். அந்தச் சமத்துவ உணர்வு ஆதிகாலத்தில் நடைமுறையில் இருந்திருக்கிறது. இதை மறைக்கவோ , மறுக்கவோ முடியாது. இந்தமுறை இடைக்காலத்தில் மாறுகின்றது. வேதவிதிகள், மதக்கொடுமைகள் என்ற ஒன்று உருவாக்கி ,உருவாக்கி சமுதாயம் அவளை அடக்குகின்றது.

பெண்களின் திறன்களும், உணர்வுகளும் கசக்கப்பட்டு அடிமைகளாக, அழகுப் பொருளாக, விளம்பரப் பகுதியாக மாற்றப்பட்டாள். அவளின் எண்ண மலர்கள், மலர்வளைய மலர்களாக்கப்பட்டன. கடல்மீன்கள் கிணற்றுள் போடப்பட்ட மாதிரி பெண்களின் நிலை மாறிப்போனது. பெண்கள் வானம் இருளாகிப் போனது. அந்நேரத்தில் இருட்டை விரட்டியபடி ஒளி வீசும் நிலவாக பாரதத்தில் ஒரு பாரதி, எங்கள் ஈழத்தில் ஒரு சூரியன் பிரபாகரன். இவர்கள் பெண்களுக்கான அடக்குமுறை விதிகளை உடைத்தெறிந்தனர். பெண்கள் இப்படித்தான் என்று கூறி, புயல்பூக்களை உருவாக்கிவிட்டனர். அதன் விளைவு,

அன்று அடுப்படியில் ஆராய்ச்சி செய்தவள், இன்று அந்நிய நாடுகளுக்குச் சென்று தன் நாட்டின் வளர்ச்சி பற்றி ஆராய்கின்றாள். மென்மையானவள் எனச் சொல்லப்பட்டவள் இன்று மெய்சிலிர்க்க வைக்கும் வாகனங்களை ஓட்டி விளையாடுகின்றாள். வீட் டிற்கு வெளியே செல்லத் தயங்கியவள் வெளிநாடுகளின் வீதியில் பவனி வருகின்றாள். அது மட்டுமல்ல, தன்குடும்பத்தையே நிர்வகிக்க முடியாதவளென வீட்டினுள் ஒரு பொந்தினுள் வாழ்ந்தவள், இன்று மக்களின் தேவைகளை நிறைவேற்றப் பெரிய பதவிகளை வகிக்கின்றாள். நிர்வாகத்திலும் நேர்மையாக இருக்கின்றாள்.

தொழில் முறையிலும் சரி, ஆதியில் அவளுக்கெனச் சில தொழில்களையே ஒதுக்கிவிட்டிருந்தனர். ஆனால் இன்று அவள் இல்லாத வேலைத்தளங்களோ, தொழில் முறைகளோ இல்லை. பிறப்பைத் தொடக்கி வைப்பதிலிருந்து வாழ்க்கையை முடிக்கின்ற இடமான சுடுகாடு வரை சென்றுள்ளாள். திருகிப் போட்டாலும் திருப்பிக் கேட்காதவள் இன்று வீட்டு எல்லை, கிராமத்தின் எல்லை, மாவட்டத்தின் எல்லை இவையெல்லாம் தாண்டி நாட்டின் எல்லையைக் கேட்கத் துணிந்துவிட்டாள். இன்று இந்த மண்ணே தலை தாழ்த்தி மங்கையரைக் கௌரவித்து நிற்கின்றது. ஏன்? பூவென்று சொல்லப்பட்டவள், புயலாகி நிற்கின்றாள். புல்லாகவும், கல்லாகவும் வர்ணிக்கப்பட்டவள் புலியாகி, காவிய நாயகியாகி நிற்கின்றாள். வேகம், விரைவு எதிலும் சாதனை மலைகளைக் குவித்து நிற்கின்றாள். அதனாலேயே சமுதாயம் கைகுவித்து வணக்கம் செய்கின்றது.

ஆகவே, படிதாண்டக் கூடாதவள், இன்று பல இடத்தில் பல கல்வி கற்கின்றாள். அல்லி மலரென அடக் கப்பட்டவள் அலையடிக்கும் பெருங் கடலினுள் புகுந்து அடக்கு முறையாளனை அழித்துள்ளாள். அடக்கமாக வாழத் நிர்பந்திக்கப்பட்டவள் அரசியலின் புதிய நுட் பங்கள் பற்றிச் சிந்திக்கின்றாள்.

அதாவது மருட்சி கொள்ளும் மான் விழியுமல்ல; கவர்ச்சிக் கயல்விழியுமல்ல; புரட்சிக் கனல்விழி பெண்கள் விழி. பேதையாக இருந்து விட்டால் போதைக்காகப் போய்விடும் பெண் உடல். பெண்ணே! பேரெழுச்சி கொண்டு எழுந்திடு. சமூகப் பழமைகள் நிலை குலைந்து விடும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவையல்ல பெண்களின் குணங்கள். மாறாக வீரம், துணிவு, அஞ்சாமை போர்க்குணங்கள் தான் அவளுடையவை. அதாவது புதுமைப் பெண்கள் புயலுக்கு அடிபணியாப் புரட்சிப் பூக்கள்; சிறைக்கம்பிக்க ளுக்கு வெளியே உள்ள சிதையா ஓவியங்கள்.

அப்போ! சிறைக்கம்பிகளுக்குள்ளும் இருக்கிறார்களா? ஆம் இருக்கிறார்கள். அவர்களிடம் பெண்ணே! கட்டில் சுகம் கொடுத்து, காமத்துப் தீயணைத்து கொட்டிக் கொண்ட பல இலட்சமுடன் நீ வந்து தொட்டில் மீதொரு முத்தை மலரவைத்து, மொத்தமாய் உன்னை அர்ப்பணிக்க நீ வெறும் சுரைக்காயா சொல் பெண்ணே? அலங்கரிக்கப்பட்ட அடிமைகளாக இனியும் நீங்கள் வாழக்கூடாது. உணர்வுகளை விற்று உணர்ச்சிகளை ஏற்று வாழப் பெண்கள் குருதியோடும் பிணங்களல்ல. மஞ்சத்தில் காத்திருத்தலே தஞ்சம் எனப் போதிக்கப்பட்டு வஞ்சிக் கப்பட்டவள் பெண். இனி நெஞ்சத்தில் வீரத்திற்குப் பஞ்சமில்லை என எழுந்திடுவாய் பெண்ணே. அப் பொழுது நீ விடுதலை பெற்றாய்.

கண்மணியே! கல்விக்கும் செல்வத்திற்கும் வீரத்திற்கும் பெண்தான் வடிவமானவள். அவ்வாறிருக்க அதை நீயேன் ஆண்களிடம் எதிர்பார்க்க வேண்டும். வேண்டாம் உனக்குள்ளேயே உருவாக்கிவிடு. சீதையைப் போல் இருக்காமல் கண்ணகியாய் மாறுங்கள். உங்கள் நீதியை நீங்களே பெற்றிடுங்கள். மற்றவரின் விமர்சனத்தைப் பொருட்படுத்தாதீர்கள். அன்னை மேரி அடுத்தவனின் விளம்பரத்தை பொருட்படுத்தவில்லை. அதனாலேயே இறைமகனை கருத்தரித்தார். மகிமையடைந்தார். ஆகவே, நீங்களும் இலக்கை மட்டும் கொண்டு உண்மை ஒழுக்க விதியிலிருந்து பிறழாமல் சாதனை செய்யுங்கள். சரித்திரம் படைப்பீர்கள்.

**வாழ்க தமிழ்!**
**வளர்க பெண்கள் சாதனைகள்!!**
**விடிவைப் பெறுக எம் தாயகம்.**

பெண்ணை மதிப்போம் - அவர் தம் மென்மையை மதிப்போம் - தாய்மையைப் போற்றுவோம் மார்ச் 8 மட்டுமல்ல என்றுமே!

வனிதையரின் வாழ்வு வளம்பெற
இன்றே அருகில் உள்ள
மக்கள் வங்கி
கிளையில்
"வனிதா வாசனா"
கணக்கொன்றை
ஆரம்பியுங்கள்.



PEOPLE'S BANK
மக்கள் வங்கி

பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

(C/3883)

எந்த நாட்டில், சமூகத்தில், குடும்பத்தில் பெண்கள் மதிக்கப்படுகிறார்களோ அந்த நாடு, சமூகம், குடும்பம் உயர்வடையும்

# மகளிருக்கு மட்டுமே

# காந்தா ரண் கிறும்



**கணக்கொன்றைத் தொடங்குவதற்கான தகுதிகள்**

- 18 வயதிற்கு மேற்பட்டிருத்தல்.
- ஆகக் குறைந்த வைப்பு – கணினி மயப்படுத்தப்பட்ட கிளைகளாயின் ரூ.500/= கணினி மயப்படுத்தப்படாத கிளையில் சாதாரண சேமிப்புக் கணக்கொன்றைத் தொடங்கும் தொகை.

**பணம் வைப்பில் இடல்**

சாதாரண சேமிப்புக் கணக்குகளைப் போல எந்த அளவு தொகையையும், எந்த வேளையிலும் வைப்பில் இடலாம். அல்லது விருப்பத்தின் பேரில் குறிப்பிட்ட ஒரு தொகையை மாதாந்தம் வைப்பில் இடலாம்.

**பணத்தை மீளப்பெறுதல்**

சாதாரண சேமிப்புக் கணக்குகளைப் போல விரும்பிய தொகையை மீண்டும் பெற முடியும். ஆயினும், காப்புறுதி வருடாந்த பரிசிழுப்பு போன்ற விசேட அநுகூலங்களைப் பெறுவதற்காயின் அதற்குரிய தொகை தொடர்ந்து வைப்பில் இருத்தல் அவசியமாகும்.

**வட்டி**

சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு மேலதிகமாக வருடாந்தம் 0.5% கிடைக்கும்.

**காப்புறுதி**

காப்புறுதிக்குத் தகைமை பெறுவதற்கு அதிகபட்சம் ரூ. 3,000/= ஐ கடந்த ஆறு மாதங்களில் கணக்கில் வைத்திருக்க வேண்டும்.
மரணம் நேரும் பொழுது கணக்கிலுள்ள தொகையின் பத்துமடங்கு காப்புறுதி இழப்பீடாக வழங்கப்படும். அதேவேளை அங்ஙனம் வழங்கப்படும் அதிக பட்சத்தொகை ரூ. 500,000/= ஆகும். மரணம் நேரும்போது காப்புறுதி இழப்பீட்டுப் பணம் சட்டபூர்வமான உரிமையாளருக்கு வழங்கப்படும்.

**நிரந்தர ஊனமடையும்போது / நோயுறும்போது**

விபத்து நிகழ்ந்த தினத்தில் கணக்கில் உள்ள தொகையின் பத்துமடங்கு அதிகபட்சமாக ரூ.500,000/= ஆகும். இத்தொகை, கணக்கை வைத்திருப்பவருக்கு வழங்கப்படும்.

**நெருப்பு, மற்றும் மின்சாரம் தாக்குதல் போன்ற அவசர விபத்துக்களின் போது**

இவ்விபத்து நிகழ்ந்த தினத்தில் கணக்கில் உள்ள தொகையின் 5 மடங்கு ஆகும். அதிக பட்சத்தொகை ரூ 500,000/= ஆகும். இத்தொகை, கணக்கை வைத்திருப்பவருக்கு வழங்கப்படும்.

**வேறு நன்மைகள்**

- காந்தா ரண் திவிமக, காந்தா ரண் திரிய ஆகிய கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், இலகுவான பிணையுடன் சுயதொழில் செய்வதற்கு குறைந்த வட்டியுடன் கடன்.
- அப்சரா கடன் அட்டையைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.
- ரூ. 5,000/=க்குக் குறைந்த கடனை கணக்கின் தொகைக்குச் சமமான அல்லது அதற்குக் குறைந்த தொகையை உடனே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு. கடனுக்காக வைப்பதற்காக தொகைக்கான வட்டி விகிதத்தைவிட 2% மட்டும் செலுத்த வேண்டும்.

## இலங்கை வங்கி BOC

BANK OF CEYLON

(C/3879)

---

நாளை நமக்கொரு தீர்வு தந்திட
நாளும் உழைத்திடு பெண்ணே உழைத்திடு.
வேளை முழுவதும் விடியலைச் சேர்ந்திட
வீறுடன் எழுந்திடு பெண்ணே எழுந்திடு.

நங்கையர்களின் மனங்கவர்ந்த பட்டுப் புடவைகளுக்கு ராசியான ஸ்தாபனம்.



## சீமாட்டி புடவையகம்

122 : மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222-2196.

(C/3878)

---

பெண்கள் சமவுரிமை பெற்று சகலவித
அடக்குமுறைகளில் இருந்தும் விடுதலை பெற்று
ஆண்களுடன் சமத்துவமாக - கௌரவமாக
வாழக்கூடிய புரட்சிகர சமுதாயம் அமைய வேண்டும்.

## YOGI
**BEAUTY PARLOUR AND HOME SCIENCE ACADEMY**

(Academy of Beauty Culture, Hair Dressing & Home Economics)



75, அம்மன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

T.P: 222 2796,
0777164923

(C/3877)

---

ஆயிரமாயிரம் சாதனை படைத்திட
அணிவகுத்தே சென்றிடு பெண்ணே சென்றிடு.
பாயிரமொன்று எழுதி முடித்திங்கே பாவையர்
நலனைக் காத்திடு பெண்ணே காத்திடு.

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த பற்களைக் கட்டிக்கொள்ளவும், பொருத்திக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்



## எரிக்கணேஷ்

564, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2486

இல : 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

இல : 91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

(C/3876)

---

பெண்விடுதலை என்பது, அரச அடக்குமுறைகளில் இருந்தும், சமூக ஒடுக்கு முறைகளில் இருந்தும், பொருளாதார சுரண்டல்முறைகளில் இருந்தும் விடுதலை பெறுவதே

உங்கள் பழைய நகைகளைக் கொடுத்து,
உடனுக்குடன் புதுப்பொலிவுடன் திகழ
அசல் 22 கரட் தங்க நகைகளைத் தெரிவு
செய்ய இன்றே நீங்கள்
நாடவேண்டிய இடம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து தரப்படும்



## நியூ நகுலா ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 3433

(C/3880)

---

பெண் அடிமைத்தனத்துக்கு எதிராகப் பெண்களே போர்க்கொடி உயர்த்த வேண்டும், போராட வேண்டும், அப்போதே பெண்விடுதலை சாத்தியமாகும்.

அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள்
எண்ணம்போல் உடனுக்குடன் செய்து
பெற்றுக் கொள்ள நீங்கள் இன்றே நாடுங்கள்



## நியூ லலிதா நகைமாடம்

191, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
077-6027746

கொழும்பு 2470396 இந்தியா 24350938 கனடா 4162616185

(C/3881)